

Registered as a News Paper in Sri Lanka

சமூக அரசியல் மாத இதழ்

# கண்ணோட்டம்

KANNODDAM

කණ්ණෝඩ්ඩම්

வெளியீடு :- 76 | அக்டோபர் 2016 | விலை ரூபா :- 10.00


## புதிய அரசியல் யாப்பில் வருஉம் - ஆனா வராஆது

# என இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு

**சுதந்திர தமிழீழ விடுதலையே முடிந்த முடிபு: அடைந்தால் தமிழீழம் இல்லாவிட்டால் நந்திக் கடல் என பிடிவாதமாக இருந்த புலிகள் தமிழ் மக்களை முள்ளிவாய்க்கால் வரை கூட்டிச் சென்று தங்கள் கதையை முடித்துக் கொண்டார்கள்.. அவர்கள் காலத்திலும் சரி. அதற்குப் பின்னரான கடந்த ஏழு ஆண்டுகளாகவும் சரி பாராளுமன்றக் கதிரைகளை அலங்கரித்து வந்துள்ள மற்றும் பாராளுமன்றக் கதிரைக்களுக்காக அவாக் கொண்டு அலைகின்ற "தேர்தற் தமிழ் மாவீரர்கள்" தமிழர் தேசம். தமிழ்த் தேசியம். தமிழர் தாயகம். சுய நிர்ணய உரிமையோடு கூடிய கூட்டாட்சி. இறைமையோடு கூடிய சமஷ்டி. இந்தியா மாதிரியொரு சமஷ்டி. 13க்கும் மேலான அதிகாரங்கள். 13க்குக் குறையாத அதிகாரங்கள் என்று உச்சஸ்தாயில் இருந்து அடிக்கட்டை வரை வாசித்தார்கள். இவர்கள் தமிழர்களை எங்கே கொண்டு போய் முடிக்கப் போகிறார்கள் என்பதே கவலை. பரபரப்பாகப் பேசப்படுகிறபடி புதிய அரசியல் யாப்புப் பிரேரணை பாராளுமன்றம் வருகையில். அதில் சமஷ்டி இல்லை - வடக்கு-கிழக்கு இணைப்பு இல்லை - ஓற்றையாட்சியில் மாற்றமில்லை - பௌத்தமே அரச மதம் - வாளேந்திய சிங்கமே தேசியக் கொடி. இருப்பதுவே தேசிய கீதம். பெரும்பான்மையினர் ஆதிக்கப்படியே சட்டமாக்கும் பாராளுமன்றம். கொழும்பு வாழ் ஆளும் வர்க்க நிர்ணயங்களின்படியே இலங்கையின் ஆட்சி - இவற்றில் எந்தவித மாற்றத்துக்கும் இடமிருக்கப் போவதில்லை.**

## கல்வியில் ஏற்பட்டுள்ள பின்னடைவுக்கு தமிழ் கூட்டமைப்பின் அமைச்சரே காரணம்

### குமுறுகிறார் இரா. துரைரத்தினம்



இந்நாட்டில் போர்சூழல் உக்கிரமைடைந்த காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இப்போதிருப்பது போன்று கல்வி நிலை வீழ்ச்சியடைந்திருக்கவில்லை என்றும் இப்போது கிழக்கு மாகாண மாவட்டங்களில் கல்வி நிலை மிகவும் பின்னடைவு நிலையை சந்தித்திருப்பதாகவும் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு பிரதிநிதியாக உள்ள கிழக்கு மகாணசபை உறுப்பினர் இரா. துரைரட்ணம் கூறியுள்ளார். இது பற்றி அவர் குறிப்பிடுகையில், 2015 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளை பார்க்கையில் கிழக்கு மாகணம் 9ம் இடத்தில் இருப்பதாகக் கூறியுள்ள அவர், இவ்வாறு கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலைமை பின்னடைவுகளை சந்தித்திருப்பதற்கு தான் பிரதிநிதித்துவப்படுத்தும் அதே தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் திரு. சி. தண்டாயுதபாணி அவர்களே பொறுப்பேற்க வேண்டுமென

( தொடர்ச்சி 4 ஆம் பக்கம் )

### வடக்கு -கிழக்கு இணைப்புக்கு சங்கு



அண்மைக்காலங்களில் தென்னிலங்கைத் தலைவர்கள் புதிய அரசியல் யாப்பு எப்படிப்பட்டதாக இருக்கப் போகிறது. அதில். அதிகாரப் பகிர்வு எவ்வகையாக இருக்கப்போகிறது என்பதனை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல தடவைகள் கோடிட்டுக் காட்டிவிட்டார்கள். அதிலும் குறிப்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் யாழ்ப்பாணத்திலேயே வைத்து தமிழர்களின் காது புளிக்கும் படியாக மீண்டும் மீண்டும் உரத்துக் கூறிவிட்டார். அவை தொடர்பாக போன வருஷமே அர

( தொடர்ச்சி 9 ஆம் பக்கம் )

## வடக்கில் தாதிகள் பற்றாக்குறை ஏன் ?

மருத்துவ தாதியர் பற்றாக்குறையால் வடக்கில் வழங்கப்படும் வைத்திய சேவைகளுக்கு பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகக் கூறுகிறார் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்.

வடக்கில் சுகாதார சேவைகளுக்காக பெருமளவு மருத்துவ தாதியர்கள் தேவைப் படுகிறார்கள் எனவும் ஆனால், அதற்குத் தயாராக இருப்பவர்கள் இங்கு மிகவும் குறைவாயுள்ளதாகவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திரு கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், க.பொ.த உயர்தர பரீட்சையில் பௌதீக விஞ்ஞா

( தொடர்ச்சி 10 ம் பக்கம் )

### மூன்று ஆண்டுகளாகியும் முல்லைத்தீவு மக்களுக்கு

## எந்த நன்மையும் செய்யவில்லை

### குற்றம் சாட்டுகிறார் திரு. சிவநேசன்



கடந்த செப்டெம்பர் 21 ம் திகதியோடு வடக்கு மாகாணசபை திரு விக்கினேஸ்வரன் தலைமையில் பதவியேற்று 3 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது. இந்த 3 ஆண்டு காலத்தில் பயனுள்ள வகையில் வடக்கு மாகாணசபை ஏதாவது நன்மையை மக்களுக்குச் செய்துள்ளதா? என தமிழ் மக்கள் அனைவரிடையேயும் கேள்வி எழுந்துள்ளதென வடக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முல்லைத்தீவு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உறுப்பினர் கௌரவ திரு. சிவநேசன் விசனம் தெரிவித்துள்ளார்.


வடக்கு மாகாணசபை ஆட்சி நிர்வாகத்தில் இடம்பெறும் ஊழல் மோசடிகள், அதன் செயற்திறனின்மை, கிடைக்கும் நிதி வளங்கள் முழுமையாக பயன்படுத்தப்படாமை, அதனால் மக்களுக்குப் பயனுள்ள காரியங்கள் எதனையும் அது ஆற்றாமை போன்றவை தொடர்பாக

( தொடர்ச்சி 4 ம் பக்கம் )

### கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லையெனில்

## தமிழ் எம்பிக்கள் பதவி விலக வேண்டும்

### கோருகிறார் திரு. லிங்கநாதன்



2016 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் தமிழ் மக்களின் பிரச்சினைகளிற்கான அரசியல் தீர்வு ஏற்படும் என வாக்குறுதியளித்தே தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை அமோகமாகப் பெற்று வெற்றி பெற்றனர். அவ்வாறு கூறியபடி இந்த ஆண்டுக்குள் அரசியல் தீர்வு கிடைக்காவிட்டால் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி விடிகின்ற போது தமிழ் கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களும் தமது பதவிகளை இராஜினாமா செய்து விலக வேண்டும் என தமிழத் சேியக் கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினராக உள்ள திரு ஜி. ரி. லிங்கநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

( தொடர்ச்சி 4 ம் பக்கம் )

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி [S.D.P.T]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம்
KANNODDAM
294 A, கஸ்டிவீதி, புங்கன்குளம் சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222022



## எங்கே செல்லும் இந்தப் பாதை

ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி தொடர்பான விடயங்களில் இந்த அரசாங்கம் வந்ததன் பின்னர் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் அரச மட்டத்தில் அரசியல் பொருளாதார ரீதியான முன்னேற்றங்களுக்கான அக்கறைகள் காட்டப்படுவதாக தோற்றங்கள் காணப்பட்டாலும், வேகம் போதாது, மந்த கதி, இழுத்தடிப்பு, உரிய காரியங்கள் ஆற்றப்படாமை என அபிப்பிராயங்கள் மக்கள் மத்தியில் நியாயமாகவே நிலவுகின்றன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதில் - இராணுவ மயப்பட்ட நிலையைத் தளர்த்துவதில் - சிறைகளில் உள்ளவர்களை விடுதலை செய்வதில் - காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் - இடம்பெயர்ந்த மக்களை சொந்த இடங்களில் மீளக் குடியேற்றுவதில் இழுபறிகள் நிலவுவதால் பாதிக்கப்பட்ட மக்கள் சினமடைவது இயல்பே. கைதுகள், காணாமல் போனவர்கள், சிறை சித்திரவதை, பயங்கரவாதத் தடைச் சட்டம் இராணுவ வாதம் - இவற்றிற்கு பதில்களே இல்லாமல் பல தசாப்தங்களாக பயணிக்கிறது இலங்கை.

முப்பதாண்டு காலப் பேரழிவுகளுக்குப் பின்னர் - யுத்தம் முடிவுக்கு வந்து ஏழு ஆண்டுகளுக்கு மேலாகியும் - இன்னமும் யுத்தத்திற்கு காரணமான இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதிலும், நிகழ்ந்த மானுட அவலங்களினால் விளைந்த மனவலிகளிலிருந்து மக்களை விடுவிப்பதிலும் அரசாங்கம் மிக மந்த கதியில் செயற்படுவது மக்களை பொறுமையின் எல்லைக்கு அழைத்துச் செல்கிறது.

யுத்தத்தால் இடம்பெயர்க்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றங்கள், சமூக பொருளாதார அபிவிருத்தி, நடைமுறையில் இருக்கும் சட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள், புதிய அரசியல் யாப்பை விரைந்து ஆக்குவதற்கான ஏற்பாடுகள், மக்களின் அடிப்படையான வாழ்க்கைப் பிரச்சினை தொடர்பான திட்ட முன்னெடுப்புகள் போன்றவற்றில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கும் மக்களின் குறைந்த பட்ச எதிர்பார்க்கைகளுக்கும் இடையில் இணக்கம் ஏற்படா வகையில் இங்கு நிலவும் பெருத்த இடைவெளி முக்கியமான விடயமாகும்.

வடக்கு முதலமைச்சர் விக்கினேஸ்வரனின் தலைமையில் 'எழுக தமிழ்' என்ற பெயரில் நடத்தப்பட்டுள்ள பகிரங்க அரசியல் நடவடிக்கையானது அவரதும் அவரோடு கூட்டுச் சேர்ந்துள்ளவர்களினதும் என்னென்ன உள் நோக்கங்களுடன் மேற்கொள்ளப்பட்டது என்பது ஒருபுறமிருக்கட்டும். அதற்கும் மேலாக, புதிய அரசு தமிழ் மக்களுக்கு எவ்வாறனதொரு அரசியற் தீர்வை வழங்கப்போகிறது என்பதில் அரசாங்கத் தலைவர்களும், அரசாங்கத்துடன் நல்லுறவாக செயற்பட்டு வரும் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும் வெளிப்படைத்தன்மை இல்லாது செயற்பட்டு வருகின்றமை பற்றி நீதியரசர் விக்கினேஸ்வரன் அதிருப்தி வெளியிட்டுள்ளமையைத் தவறென முடியாது.

அதேவேளை, தமிழ் மக்களின் அரசியல் அதிகார மையத்திற்குள்ளேயே ஒருவருக்கெதிராக ஒருவர் பகிரங்கத்தில் பல்லைக் குத்துவது தொடர்பாக மக்கள் திகைத்துப் போயிருக்கின்றனர். தேர்தற் காலங்களில் தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையாக ஒரேமுகமாக தங்களுக்கே வாக்களிக்க வேண்டுமென தமிழ் மக்களைக் கேட்கும் இவர்கள், இப்பொழுது பகிரங்கத்தில் ஆளையாள் அசிங்கப்படுத்துகிறார்கள் . இதைப் பார்க்கின்ற தமிழர்கள் அடுத்த கட்டம் என்ன என்று தெரியாமல் குழம்பிப் போயிருக்கிறார்கள். இவர்கள் எந்தக் காலத்திலாவது எந்த விடயத்திலாவது உண்மையாகப் பேசியிருக்கிறார்களா? நேர்மையாக, வெளிப்படையாக செயற்பட்டிருக்கிறார்களா? என தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே கேட்டுப்பார்த்தார்களானால், ஏமாற்றுபவர்கள் யார்? ஏமாறுபவர்கள் யார்? என்பதைத் தெளிவாகவே புரிந்து கொள்வார்கள்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சமஸ்டி முறை சிறந்ததென்கிறார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பௌத்தத்தின் சிறப்பிடம், ஒற்றையாட்சி முறை என்பவற்றில் மாற்றங்கள் இல்லை என்கிறார். சம்பந்தரோ 2016 இற்குள் சிறந்த தீர்வு கிடைக்கும் என அடித்துச் சொல்கிறார். இவ்வாறு அரசியற் தலைவர்கள் மாறிமாறிச் சொல்வது மக்களுக்கு எரிச்சலையும் நம்பிக்கையீனங்களையுமே ஏற்படுத்துகிறது.

யுத்த காலத்தில் அதிகாரப் பகிர்வு தொடர்பாக அள்ளி அள்ளி வாக்குறுதிகளைத் தந்த அரசியற் தலைவர்கள், யுத்தப் பேரழிவு முடிவடைந்ததற்குப் பின்னர் அதிகாரப் பகிர்விற்கு தயக்கம் காட்டி ஆண்டுகணக்கில் இழுத்துச் செல்வது கவலைக்குரியதாகும். அதிகாரப் பகிர்வை அரசியல் யாப்பு பூர்வமாக வழங்குவதற்கான துணிச்சல் 2015 ஜனவரி 8ல் ஏற்பட்ட மாற்றத்தின் பின்னராயினும் அரச மட்டத்தில் ஏற்பட்டிருக்கிறதா என்பது இன்னமும் கேள்விக்குரியதாகவே உள்ளது.

பேரினவாத அழுத்தங்களை மீறி அரசு எவ்வளவு தூரம் செல்லும் என்பது முக்கியமான கேள்வியாகும். நீதிக்குப் புறம்பான அதிதீவிர இனவாதிகள் மக்கள் மத்தியில் சிறுபகுதியினரே. இவர்களுக்கு அடிபணிந்த வகையாக அரசியற் தீர்வு காணப்படுவது தவிர்க்க முடியாத எதார்த்தம் என்பதை சுதந்திரத்தை நேசிக்கும் எந்த மனிதரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

வெவ்வேறு இன சமூகங்களின் அபிலாசைகளைக் கருத்திற்கெடுத்தே இன்றைய ஜனநாயக உலகம் இயங்குகிறது. நாம் இந்த உலகில் தனித்தீவு மனப்பான்மையுடன் இருக்க முற்படாமல், தாராள மயமான பரந்துபட்ட உலக நியாயங்களைக் கௌரவிக்கும் நாடாக இலங்கை அமைய வேண்டும்.

## தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி
### Social Democratic Party of Tamils (S.D.P.T)

## அரசியற் திட்டம்

2016 ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெற்ற கட்சிக் காங்கிரஸினால் அங்கீகரிக்கப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை, இனரீதியாகவோ மதரீதியாகவோ இலங்கை மக்களிடையே முரண்பாடுகளோ, பகைமைகளோ, கலவரங்களோ இடம்பெற்றதில்லை. என்றைக்கு தேர்தல் அரசியல் ஆரம்பமாகியதோ அப்போதிருந்தே அவை ஆரம்பித்தன. அவற்றின் தொடர்ச்சியாக மக்கள் பயங்கரவாதங்களின் கொடூரங்களுக்கும், இனப்படு கொலைகளுக்கும் உள்ளாயினர். சுமார் 25 ஆண்டுகள் நீடித்த யுத்த அழிவுகள் மக்களையும் நாட்டையும் சீரழித்தன. 2009 ஆம் ஆண்டு புலிகளின் தலைமையும் அதன் இராணுவ அமைப்புக்களும் அழிக்கப்படும் வரை அவை தொடர்ந்தன. அதன் பின்னர், படுகொலைகள், சொத்துக்களின் அழிவுகள், இடப்பெயர்வுகள் போன்றன படிப்படியாகக் குறைந்து இப்போது அந்த மோசமான நிலை இல்லை என்ற நிலைமை ஏற்பட்டுள்ளமை ஜனநாயகத்தையும், சமாதானத்தையும் நேசிக்கும் முற்போக்கு சக்திகள் அனைவருக்கும் நிம்மதியை ஏற்படுத்தியுள்ளது.

அகதிகளாக்கப்பட்ட மக்களிற் சில ஆயிரம் பேரைத் தவிர ஏனையோர் பெரும்பாலும் தங்கள் தங்கள் இடங்களில் குடியேறிவிட்டார்கள்; பெரும்பாலானவர்கள் புனர்வாழ்வு உதவிளைப் பெற்று தமது புதிய வாழ்வில் பல்வேறு கஷ்டங்கள், சந்தேகங்கள் மத்தியிலும் முன்னோக்கி நடைபோடத் தொடங்கி விட்டார்கள்; அரச, சமூக, பொருளாதாரக் கட்டுமானங்கள் பெரும்பாலும் புனரமைக்கப்பட்டிருக்கின்றன; கல்வி மற்றும் சுகாதார நிறுவனங்கள் சுமுகமாக செயற்படும் நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன; மக்கள் இலகுவாகவும் துப்பாக்கிக் குண்டுகளின் பயமின்றியும் போக்குவரத்து செய்யக்கூடிய நிலைமைகள் இங்கு ஏற்பட்டிருக்கின்றன; நவீன தொடர்பு சாதனங்களின் வசதிகள் இங்கு விரைவாக விரிவடைந்து கொண்டிருக்கின்றன; வடக்கு-கிழக்கு மக்களின் வாழ்வில் செழிப்புகள் ஏற்பட இன்னும் பல ஆண்டுகள் தேவைப்பட்டாலும் வடக்கு-கிழக்கின் மூலை முடுக்கெல்லாம் பல நூற்றுக்கணக்கான கோவில்கள் வெளிநாட்டுத் தமிழர்களின் செல்வ வளங்களால் புதுப் பொலிவு பெற்றிருக்கின்றன. வடக்கு-கிழக்கின் நகரங்களின் வர்த்தகங்கள் பெரும்பாலும் நவீன வளர்ச்சிகளை குறுகிய காலத்தில் அடைந்துள்ளன; வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் தமது விடுதலைக் காலங்களை நாட்டிலுள்ள தமது உறவினர்களுடன் மகிழ்ச்சியாகக் கழிக்க தமது பாரம்பரிய ஊர்களுக்கு உலா வந்து போவது வழமையாகிவிட்டது.

வடக்கு-கிழக்கு மக்கள் தமது பாராளுமன்ற, மாகாண சபைகள், மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான பிரதிநிதிகளை சுதந்திரமாக தெரிவு செய்கின்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. வடக்கு-கிழக்கு மாகாண சபைகள் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கு நன்மைகள் செய்கின்றனவோ இல்லையோ, தமிழ் பேசும் இனத்தவர்கள் மத்தியில் விறுவிறுப்பான அரசியல் அரங்கங்களாக அவை செயற்படுகின்றன.

மேற்கூறப்பட்டவை ஒரு புறமாக இருக்க, மறுபுறமாக, யுத்தம் முடி வடைந்து ஆறு ஆண்டுகள் ஆனபோதும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வை ஏற்படுத்துவதில் அதற்கான நம்பிக்கைகளைக் கட்டியெழுப்புவதில் தவறினார்; அவரது ஆட்சிக் காலத்தில் மீளக் குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் அரசு குறித்து, நாட்டு மக்கள் அச்சமற்று வாழ்தற்கான சூழலை ஏற்படுத்தத் தவறினார்; யுத்த வெற்றி தமக்கு எப்போதும் உதவும் என்ற எண்ணத்தில் சர்வதேச சமூகங்களைப் பகைத்துக் கொண்டார்; நாட்டு மக்கள் எதிர்நோக்கிய வாழ்க்கைச் செலவுப் பிரச்சினையைத் தீர்க்கத் தவறினார். தமது குடும்ப உறவினர்களும், தம்மைச் சார்ந்தவர்களும் மேற்கொண்ட ஊழல்களையும், அதிகார துஷ்பிரயோகங்களையும் தடுக்கத் தவறினார்; வெவ்வேறு இன மத மக்களின் சமய கலாசாரங்களுக்கான பாதுகாப்பை வழங்கத் தவறினார்; சிறுபான்மைத் தேசிய இன மக்களின் நம்பிக்கைகள் தனது அரசுக்கு அவசியம் என்பதை உணரத்தவறினார்; அரசியற் தீர்வு விடயத்தை நிராகரிப்பவராகவும், ஜனநாயகமற்றதொரு சூழலைத் தொடர்ந்து பராமரிப்பவராகவும், சிங்களமயமாக்கம், பௌத்த மயமாக்கம், இராணுவமயமாக்கம் ஆகியவற்றில் அக்கறை காட்டியவராகவும் செயற்பட்டார். இதனால், அவரது ஆட்சிக் காலம் மக்கள் விரோத ஆட்சிக்காலமாகவே அமைய நேரிட்டது. புலிகளுக்கெதிரான யுத்தத்தை வென்றவர் என்ற மகிமையை அவர் இலங்கையின் பெரும்பான்மையான மக்கள் மத்தியில் பெற்றிருந்த போதிலும் அவரது ஆட்சி தொடர்பாக எழுந்த பல குற்றச்சாட்டுகளால் அவர் இலங்கையின் அனைத்து இன மக்களாலும் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தோற்கடிக்கப்பட்டார். பின்னர் நடந்த பாராளுமன்றத் தேர்தலிலும் அவரால் எதிர்பார்த்த வெற்றியை அடைய முடியவில்லை.

2015ம் ஆண்டு ஜனவரி மாதம் திரு. மைத்திரிபால சிறிசேனா அவர்கள் ஜனாதிபதியானதைத் தொடர்ந்து நாட்டு மக்களிடையே இனிமேல் சுதந்திரக் காற்று வீசும், ஊழலற்ற ஆட்சி அமையும், நாடு எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்கெல்லாம் விரைவில் தீர்வு கிடைக்கும் என பெரும் எதிர்பார்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. 19ஆவது அரசியல் யாப்பு சீர்திருத்தத்தாலும், கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் புரிந்துணர்வுடன் போட்டியிட்டு வென்று பின்னர் கூட்டரசாங்கத்தை அமைத்தமையும் நாட்டு மக்களிடையே பெரும் நம்பிக்கைகளை ஏற்படுத்தின.

மேற்கூறப்பட்டவையெல்லாம் காணப்படினும், இங்கு தமிழ் புத்தி ஜீவிகளோ அல்லது தமிழ் சமூக அரசியற் தலைவர்களோ நாட்டின் அரசியல் பொருளாதார நிலைமைகள் தொடர்பாக திருப்தி கொள்ளவில்லை. இதனை வெறுமனே அரசியல் உள் நோக்கங்கள் கொண்டவை என புறக்கணிக்க முடியாது. இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு, நாட்டு மக்களின் பொதுவான அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக நிலவும் பிரச்சினைகள், மக்களின் வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை மற்றும் பொருளாதார ரீதியாக நாடு தொடர்ந்தும் எதிர்நோக்கும் நெருக்கடிகள் ஆகியவற்றால் இங்குள்ள முற்போக்கு ஜனநாயக சக்திகளின் மத்தியிலும் அதிருப்திகள் மற்றும் நம்பிக்கையீனங்கள் காணப்படுவதோடு வெவ்வேறு வகையான ஊகங்களும் சந்தேகங்களுமே மேலெழுந்து நிற்கின்றன.

இந்தப் பின்னணியிலேயே இக்கட்சியானது அதனது காங்கிரஸை நடாத்தியுள்ளது. பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கடந்த காலங்களில் அது கொண்டிருந்த இலட்சியக் குறிக்கோள்களுக்கு ஏற்பவும், எதிர்நோக்கிய வெவ்வேறு சூழ்நிலைகளுக்கேற்பவும், வெவ்வேறு வடிவங்களிலும்- வெவ்வேறு உள்ளடக்கங்களுடனும் மாறுபட்ட அரசியல் வழிமுறைகளைக் கையாண்டு செயற்பட்டு வந்திருக்கிறது. 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற கட்சியின் காங்கிரஸானது கட்சியின் கடந்தகால வரலாற்றுப் பாரம்பரியங்களையும், நாட்டின் கடந்தகால வரலாற்று அநுபவங்களையும் அடிப்படையாகக் கொள்வதோடு, மக்களின் இன்றைய அபிலாஷைகள் மற்றும் தேவைகளைக் கவனத்திற் கொண்டும், இன்றைய உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலைமைகளை அவதானத்தில் எடுத்தும், கட்சியின் எதிர்காலத்துக்கான அரசியற் திட்டத்தையும், கட்சியின் கட்டமைப்பையும், கட்சியின் வேலைத் திட்டங்களுக்கான மூல அணுகு முறைகளையும், கட்சியின் நடைமுறைகளுக்கான அரசியற் பாதையையும் தீர்மானித்துள்ளது. அத்துடன் கட்சியின் பெயரிலும் மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. மேலும், கட்சியின் காங்கிரஸானது இனிவரும் காலத்துக்கான கட்சியின் தேசிய தலைமையையும் தெரிவு செய்துள்ளது. ஜனநாயகப் பண்பாட்டின் அடிப்படையில் காங்கிரஸ் மாநாட்டினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் பகிரங்கமாக இங்கே மக்களுக்கு பிரகடனப்படுத்தப்படுகிறது.

( அடுத்த இதழில் தொடரும் )

தோழர்களே! நண்பர்களே! வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும் , ஆக்கங்களையும் வரவேற்கிறோம்.

தொடர்புகளுக்கு :-

இல: 294 A, கஸ்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏத்தனை காலந்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே!

## முப்பது ஆண்டுகால யுத்தத்துக்குள் அகப்பட்ட தமிழ் சமுதாயத்தின் இரண்டு தலைமுறைகள் அழிந்து போய்விட்டன. ஆனால், வழமைபோல் தமிழ் அரசியற் கபடதாரிகள் தமது அரசியல் சித்து விளையாட்டுக்களில் தொடர்ந்தும் ஈடுபடுகிறார்கள்.

இலங்கையின் ஆட்சி அதிகாரக் கட்டமைப்பில் தாங்கள் எப்படி பதவிகளைப் பெறுவது, பெற்ற பதவிகளை எப்படி தக்க வைத்துக் கொள்வது, அப்பதவிகளால் கிடைக்கும் சலுகைகளை எப்படி தவறாமற் பெற்றுக் கொள்வது என்பதிலேயே இவர்கள் குறியாக இருக்கிறார்கள். தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவே தாங்கள் போராடுவதாகவும், சலுகைகளுக்காக அல்ல எனவும் நடிக்கிறாாகள். ஆனால், தமது பதவிகளுக்காக கிடைக்கும் எல்லாச் சலுகைகளையும் தவறாது பெற்று விடுவதில் மிக அக்கறையோடு செயற்படுகிறார்கள்.

பாதிக்கப்பட்ட - இழப்புக்களை சந்தித்த மக்களின் வாழ்வில் எந்த மீட்சியும் இல்லை. பாதுகாப்பின்மை, சாப்பாட்டுக்கே வருமானம் போதாமை, தங்களது பிள்ளைகளது கல்வி முன்னேற்றத்துக்கு என்ன செய்வது, வருத்தம் வந்தால் கடையில் மருந்து வாங்குவதற்கு என்ன செய்வது என பல பிரச்சினைகளை அடிமட்டத்தில் வாழும் சாதாரண மக்கள் நாள் தோறும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

### அதிகார வர்க்கத்திடம் சிக்கிக்கிடக்கும் தமிழர்கள்

அரச நிறுனங்களின் குறைபாடுகள் மக்களை விரக்தியடையவும் சினமுறவும் செய்கின்றன. தமக்கு கல்வி தர வேண்டிய பாடசாலைகளும், தமது வைத்தியத்துக்கு மருந்து தர வேண்டிய வைத்தியசாலைகளும் மாகாண சபைகளின் அதிகாரத்தின் கீழேதான் இருக்கின்றன என்பது சாதாரண மக்களுக்குத் தெரியாது. ஒரு சிறிய விடயத்துக்காக மாவட்ட செயலகத்துக்கோ அல்லது பிரதேச செயலகத்துக்கோ போனால் அங்கு அதிகாரத்திலுள்ளோர் சாதாரண மக்களின் காலத்தையோ, வயதையோ, சாதாரண மானுட கௌரவத்தையோ கவனத்திற் கொள்ளாமல் நடந்து கொள்ளும் முறைகள் என்பன ஒட்டு மொத்தத்தில் தமிழர்களிடையே அரசுக்கு எதிரான எண்ணத்தையே வளர்க்கிறது.

எனவே. ஒரு சிங்களப் பிரஜைக்கு தமிழ் அதிகாரிகளைக் கொண்ட வடக்கிலும் சரி. சிங்கள அதிகாரிகளைக் கொண்ட தெற்கிலும் சரி கிடைக்கின்ற மரியாதை தமிழர்களுக்கு எந்த இடத்திலும் கிடைப்பதில்லை. குறிப்பாக இலங்கையின் எந்தப் பாகத்திலும் சிங்கள அரச உத்தியோகத்தர்களை விட தமிழ் அதிகாரிகள் அரசுக்கு விசுவாசமாக இருப்பதிலேயே அக்கறையாக உள்ளனர். யுத்தகாலத்தில் இராணுவம், பொலிஸ் மற்றும் அரசின் புலனாய்வு மற்றும் உளவு அமைப்புக்களால் தமிழர் பெரிதும் பாதிக்கப்பட்டாலும் சாதாரண காலத்தில், அளவுக்கு அதிகமாக அரசுக்கு விசுவாசம் காட்டும் தமிழ் அதிகாரிகளாலேயே தமிழர்கள் இந்த நாட்டில் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்பது பொதுவாகவே அறியப்பட்ட விடயமாகும்.

### கூட்டுக் களவாணிகளின் திட்டமிட்ட நாடகமா?

தமிழர்களின் விசேட பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காண வேண்டியது மிகவும் அவசியம். ஆனால், தமிழர்கள் மத்தியில் பொறுப்பு வாய்ந்த தலைமை என்பது தமிழர்களின் பல்வேறு தரப்பினரையும் அழைத்துப் பேசி ஆக்கபூர்வமான தீர்வுக்கு முயற்சித்திருக்க வேண்டும். தமிழர்கள் பல்வேறு துறைகளிலும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் முழுமையாக அறியப்பட வேண்டும். ஆனால் இரா. சம்பந்தன் - மாவை - சுமந்திரன் - விக்கி போன்றவர்களைப் பொறுத்த வரையில் அவரவரது தனிப்பட்ட அரசியலே பிரதானமானதாக உள்ளது. மக்கள் தம்பக்கமே என அவர்களிடம் உள்ள தலைக்கனமும், சுய பெருமிதமும், தமது கட்சிக்கு அடிப்படையாக ஆதரவாக உள்ளவர்களினது மட்டத்திற்கு கீழிறங்கி செயற்பட்டால் ஏதோ ஒரு வகையில் தாம் இன்று நடைமுறையில் கொண்டிருக்கும் ரகசிய அரசியல் உறவுகள் அம்பலத்துக்கு வந்து விடுமோ என்ற அச்சமுமே அவர்கள் யாரையும் அண்டாமற் செயற்படுவதற்குக் காரணங்களாக இருக்க முடியும்.

கூட்டமைப்பு எனவும் பேரவை எனவும் இப்போது பகிரங்கத்தில் நடக்கும் குடுமி பிடிச் சண்டைகள் ஒரே கூட்டுக் களவாணிகளின் திட்டமிட்ட நாடகமா? ஆல்லது தமிழ் மக்களைப் பலயீனப்படுத்தி சிங்கள பேரினவாதத்துக்குப் பலி கொடுக்கும் முயற்சியா என தமிழர்கள் மத்தியில் கேள்விகள் உள்ளன. ராஜபக்ஷாக்கள் ஆட்சியில் இருந்த காலம் வரை சம்பந்தரின் தாளத்துக்கு சல்லாரி அடித்துக் கொண்டிருந்த முதலமைச்சர் விக்கினேஸ்வரன் மைத்திரி-ரணில் கூட்டாட்சி ஏற்பட்ட பின்னர் எதற்காக தனது கதாபாத்திரத்தையும் அரசியல் நாடக வசனங்களையும் மாற்றிக் கொண்டார் என்பது பலரதும் சந்தேகத்துக்குரியவையாக உள்ளன.

ராஜபக்ஷாக்களின் நெருங்கிய சகாவான வாசுதேவ நாணயக்கார அவர்கள் திரு விக்கினேஸ்வரனின் சம்பந்தி. பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், தனது குடும்பம், தனது பதவி, அந்தஸ்த்து என 75 வயது வரை, இந்த நாட்டில் தமிழர்கள் வாழுகிறார்கள் - போராடுகிறார்கள் என்பது பற்றி எதுவிதமான உணர்ச்சியும் இல்லாமல் வாழ்ந்தவர்தான் விக்கினேஸ்வரன். கொழும்பு வீட்டில் தமிழே பேசாத ஒருவர் யாழ்ப்பாணத்தில் தமிழ் உணர்ச்சி மிதமிஞ்சி செயற்படுகிறார் என்றால் அது நிச்சயமாக சந்தேகப்பட வேண்டிய ஒன்றே.

அதேவேளை, தனது இறுதிக் காலத்தை நோக்கி கந்த புராணம், அனுமார் பாராயணம், கம்பன் விழா. இராம கிருஷ்ண மிசன், சரஸ்வதி மண்டபம் என்று இருந்த விக்கினேஸ்வரனை யாழ்ப்பாணத்துக்குக் கூட்டி வந்து தமிழ் அரசியற் தலைவராக்கியவர் சம்பந்தர். அப்படிப்பட்ட சம்பந்தரையே சங்கடத்துக்கு உள்ளாக்கும் வகையாக ஓர் அரசியலை நடாத்துவதற்கு விக்கினேஸ்வரன்






அப்படி என்ன ஏறிய ஏணியையே எட்டி உதைக்கும் அளவுக்கு மோசமாமானவரா? எனவும், எனவே இப்போது நடப்பது சம்பந்தரும், விக்கினேஸ்வரனும் கூட்டாகத் திட்டமிட்டு நடத்தும் அரசியல் நாடகமே என்பாரும் உளர். அதாவது, அரசாங்கத்தடன் ரகசிய இணக்க அரசியலை நடாத்துவதால் மக்கள் மத்தியில் ஏற்படும் ஆத்திரமும் விரக்தியும் மக்களை தமிழ்க் கூட்டமைப்புக்கு எதிரான வேறு திசைகளுக்கு கொண்டு போய் விடாமல் பார்த்துக் கொள்வதையே விக்கினேஸ்வரன் செய்கிறார் என ஒரு பகுதியினரால் புரிந்து கொள்ளப்படுகிறது. அதனாற்தான் தமிழ் மக்கள் பேரவை எக்காரணம் கொண்டும் ஓர் அரசியற் கட்சியாக ஆகிவிடக் கூடாது என்பதில் விக்கினேஸ்வரன் அக்கறையாக உள்ளார் எனப்படுகிறது.

### தேர்தல்கால வாக்குறுதிகளும் தொடரும் இரகசிய சமரசங்களும்

"தமிழ்த் தேசிய சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேச இறைமை, வடக்கு - கிழக்கு இணைப்பு என்பவற்றின் அடிப்படையிலான தீர்வே தமிழ்க் கூட்டமைப்பின் கொள்கை", "அதில் எந்தவித சமரசத்துக்கும் இடமில்லை", அதைச் சொல்லியே சம்பந்தரின் கட்சி அடுத்தடுத்து எல்லாத் தேர்தலிலும் வென்றது. அந்த அடிப்படையில் 2016 ஆம் ஆண்டிற்குள் அரசியற் தீர்வு கிடைப்பதற்கென்றே தமிழர்களின் வாக்குகளை கடந்த பாராளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்பினர் பெற்றனர். இப்போது அரசாங்கத்துடன் மிக ரகசியமான கொடுக்கல் வாங்கல்களுடன் நெருக்கமான நல்லுறவுகளைக் கொண்டிருக்கின்றனர்.

இனப்பிரச்சனைக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வே வேண்டும், வடக்கும் கிழக்கும் இணைந்ததாக இருக்க வேண்டுமெனக் கூறுகிறார்களே தவிர அவ்வாறானதொரு தீரவு நிச்சயமாக கிடைக்குமா? இல்லையா? என்பதை இதுவரை கூறவில்லை. சமஷ்டி முறையிலான தீர்வு என்று சொன்ன சம்பந்தர் கூட்டமைப்பினர் அந்த வாக்குறுதி பற்றி எந்தளவுக்கு பிரக்ஞையுடன் உள்ளார்கள் என்பது சந்தேகத்துக்குரியதே.

தேர்தல் காலத்தில் மக்களுக்கு உணர்ச்சியேற்றும் வாக்குறுதிகளை வழங்குவது பின்னர் அதனை மறந்து விடுவது போலித் தமிழ்த் தேசிய அரசியற் தலைமைத்துவத்தின் பாரம்பரியமே. இது வட்டுக்கோட்டையிலிருந்து தொடருகிறது. இலங்கையின் அரசியல் கட்டமைப்புக்குள் தமிழர்களுக்கு அரசியற் தீர்வெதுவும் கிடையாது எனக் கூறுவதுவும் பின்னர் தமக்கு அதே அரச கட்டமைப்புக்குள் தமது சுய அதிகாரநலன்களைத் தேடுவதுவும் 1965ல் ஐக்கிய தேசியக் கட்சியோடு தமிழரக் கட்சி கூட்டாட்சி நடத்திய காலத்தில் இருந்து நடக்கிறது.

### சமூக இயக்கங்களை நிராகரித்து போலிகளிடம் ஏமாறும் தமிழர்கள்

தமிழ் மக்களும் பிரக்ஞையற்று மீண்டும் மீண்டும் ஏமாந்து போலித் தமிழ்த் தேச வாதிகளின் பின்னால் இழுபடுவதுவும் தொடர் அரசியல் நிகழ்ச்சியாக உள்ளது. ஜனநாயக ரீதியான கருத்தொருமைப்பாட்டுடன் தீர்வை எய்துதல் என்பதை விட தேர்தல்களில் வெல்வதுவும் அதற்குத் தேவையாக மக்கள் மத்தியில் காழ்ப்புணர்வுகளையும், குரோதங்களையும், நம்பிக்கையீனங்களையும் வளர்ப்பதையுமே இந்த போலி தமிழ் அரசியல் வாதிகள் தமது வழமையாகக் கொண்டிருக்கிறார்கள்.

இனப்பிரச்சினைக்கு சாத்தியமான தீர்வுகளை சாதித்தல், படிப்படியாக முன்னேற்றங்களை அடைதல், தமிழினத்துக்கு உள்ளேயுள்ள பிற்போக்குத் தனங்கள் தொடர்பாக சம முக்கியத்துவம் கொடுத்து முற்போக்கான மாற்றங்களை நோக்கி சமூக இயக்கங்களை முன்னெடுத்தல் என பல்கோண அணுகுமுறைகள் அவசியமாகும். ஆனால், இந்த போலி அரசியற் தலைமைகள் தமிழ்ச் சமூகம் எவ்வளவுதான் பின்னடைவுகளைச் சந்தித்தாலும் அதைப்பற்றி எந்தவித அக்கறையுமின்றி தமது பதவி, புகழ், சொத்துக் குவிப்பு ஆகியவற்றின் மீதே அக்கறையாக உள்ளனர். மக்களும் ஒரு கட்டத்திலாயினும் தம்மை சுதாகரித்துக் கொள்ளாது மீண்டும் மீண்டும் உணர்ச்சிவசப்படுதல்களுக்கும் உசுப்பேத்தல்களுக்கும் தங்களைப் பலியாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மை ஒரு நாள் வெல்லும் தான். அதற்கு விலை மிகப் பெரிதே! அதற்கிடைப்பட்ட காலத்தில் இழந்தவைகளில் எவ்வெவற்றை மீட்டெடுக்க முடியும்.

### கிளிநொச்சிச் சந்தையின் கதையும் நிலையும்

கிளிநொச்சிச் சந்தை அண்மையில் தீயில் எரிந்ததால், அங்கே வியாபாரம் செய்தவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்த வியாபாரிகள் இன்று நிர்க்கதியான நிலையில் உள்ளனர். இவர்களில் 90 விழுக்காட்டுக்கும் அதிகமானவர்கள் மலையகத்திலிருந்தும் கொழும்பிலிருந்தும் 1977, 1983 வன்முறைகளின் விளைவாக கிளிநொச்சிக்கு வந்து குடியேறியவர்கள். இவர்கள் கிளிநொச்சிக்கு வந்த காலத்திலிருந்தே கிளிநொச்சி போருக்கு முகம் கொடுக்கவும் வேண்டியிருந்தது. இதனால், தொடர்ச்சியான பாதிப்பைச் சந்தித்து வந்தவர்கள். இறுதிப்போர் இவர்களை மேலும் நிர்க்கதியாக்கியது. போருக்குப் பிறகு மெல்ல மெல்ல வேர்விடத் தொடங்க இப்போது தீ எல்லாவற்றையும் எரித்துவிட்டது. இவர்கள் இன்னும் வேர் விடமுடியாமைக்கு தமிழ் அரசியலே காரணம். இந்த நிலையில் இந்த வியாபாரிகளின் பாதிப்பை வைத்து புலம்பெயர் நாடுகளில் சில அரசியல்வாதிகள் நிதி திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த மக்களுக்கு அநீதியை இழைத்து வரும் தரப்பே இன்று இவர்களுக்காக நிதி திரட்ட முற்படுகிறது.

(க. வசந்தராஜா என்பவர் எழுதி சமூக வலைத்தளங்களில் வெளியான கட்டுரையிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ப்பனில்லா ஆடுகள்

"பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்" என்றார் மகாகவி.

"விதியே விதியே தமிழச் சாதியை என் செய நினைத்தாய்" என்றும் நொந்தார்.

இன்று அதிகார போதை தலைக்கேறிய, ஆடம்பரத்தையும் -சொகுசையும் நாடும், கிடைத்த பதவிகளை வைத்து ஊழல் மோசடிகளால் குறுகிய காலத்துக்குள்ளேயே சுருட்டக் கூடியதையெல்லாம் சுருட்டிக்கொள்ள முற்படும் ஒரு மலிந்த தறிகெட்ட அரசியற் தலைமையையே இலங்கைத் தமிழினம் பெற்றிருக்கிறது என்றால் அது மிகையல்ல.

சாதாரண தமிழ் மக்களின் அவலங்கள் அதற்குத் தெரியாது - புரியாது.

இராணுவத்தின் நில ஆக்கிரமிப்பு, காடுகள், வயல்கள், குளங்கள், கடற்கரைகள் எல்லாம் இராணுவமயம் என்பவற்றின் மத்தியில் நீண்ட நெடிய யுத்தத்தின் துயரங்களுடனும் வடுக்களுடன் அன்றாட வாழ்வைக் கொண்டு செல்ல முடியாத பெரும் சவால்களை எதிர் நோக்கியபடி தமிழ் பொதுமக்கள் தமது வாழ்க்கைக் காலத்தை ஓட்ட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர்.

அடிமட்ட மக்கள் அவர்களது வறுமையை உலகறிய உயிர்வாழ்கின்றனர். நாட்டிலுள்ள மத்திய தரவர்க்கத்தினரோ வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி வெளியிலே தங்களது வறுமையைக் காட்ட முடியாது நரக வேதனைகளோடு அன்றாட வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

பாரம்பரிய தொழில்களான மீன்பிடி, விவசாயம் போன்ற தொழில்களை பராமரிப்பதற்கும் தொடர்வதற்குமான நிலைமைகள் இங்கு யுத்தத்தால் பலவீனமடைந்தவை இன்னமும் மீள முடியாமல் இருக்கின்றன. விவசாயிகள் மற்றும் மீனவர்கள் நம்பிக்கை கொள்வதற்கு மாகாண - மத்திய அரச மட்டங்கள் எந்தவித நம்பிக்கையளிக்கும் ஊக்குவிப்புக்களை மேற்கொள்வதாக இல்லை.

கொடுக்கப்பட்டுள்ள கல்வியும், தரப்பட்டுள்ள பட்டங்களும் வெள்ளைச் சேட்டுடன்ான வேலைகளுக்கப்பால் வேறு வேலைகளுக்கு இளைஞர்களைத் தகுதி அற்றவர்களாக ஆக்கியுள்ளது. ஆனால் இங்கே அவ்வாறான வேலைகள் கிடைப்பதென்பது நரிக் கொம்பு தேடுவது போலுள்ளது.

புதிய தொழில்களுக்கான வாய்ப்புக்களை உருவாக்குவதை விட்டுவிட்டு தமிழ் அரசியல் அதிகார மையங்கள் தமிழ் மக்களுக்கு கற்பனைக் கோட்டைகளைக் காட்டியபடியே தமது பதவிக் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கின்றன.

இங்கு கல்வி, சுகாதாரம், பொதுப் போக்குவரத்து போன்ற சமூகத் தேவைகளின் ஏற்பாடுகள் மிக மோசமான நிலையில் உள்ளன. அவை தொடர்பாக இங்கு அதிகார பதவிகளில் அமர்ந்திருக்கும் தமிழ்த் தலைமைகள் எந்தவித அக்கறையும் காட்டுவதாக இல்லை.

ஆக்கபூர்வமான ஒழுங்கு நடவடிக்கைகள் இல்லாமல் இங்கு குண்டர்கள் குழுக்களின் குரூரமான வன்முறைகள், பெண்களுக்கெதிரான அத்துமீறல்கள், இளைஞர்கள் மத்தியிலான போதைவஸ்து பாவனைகள் போன்ற சமூகப் பிறழ்வுகள் இங்கு அதிகரித்த வண்ணம் உள்ளன.

வடக்கு-கிழக்கின் அரச நிர்வாக அமைப்புக்களில் தமிழர்களே அதிகமாக இருப்பினும் இவர்களிடையே விதிவிலக்காக உள்ள சமூகப் பிரக்ஞை கொண்ட சிலரைத் தவிர ஏனையவர்களிடையே அதிகார போதை தலைக்கேறிய நிலைமையே காணப்படுகிறது. ஆட்சி அதிகாரத்திலுள்ள சிங்கள உயர் அதிகாரிகளுக்கு சலாம் போட்டு வசதியான தமது பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ளும் தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது அதிகார சவாரியை அப்பாவித் தமிழர்கள் மீதே விடுகின்றனர். தாங்கள் மக்களுக்கான சேவகர்கள் என்பதைவிட தமது அதிகார அந்தஸ்த்துகளைக் காட்டும் தோரணைகளை முன் நிறுத்துவதிலேயே அக்கறையாக உள்ளனர்.

பாரம்பரிய புகழ் பெற்ற வடக்கு - கிழக்கு தமிழ்க் கல்லூரிகள் இன்று தம்மைப் பணக்கார பாடசாலைகளாக்குவதிலும், பரீட்சைகளில் உயர்ந்த புள்ளிகளைப் பெறும் மாணவர்கள் மட்டுமே கொண்டிருக்கத் தயாராக உள்ளவையாகவும் ஆகியுள்ளன. அந்தக் கல்லூரிகளிலும் நிர்வாக அதிகாரத்தில் உள்ளவர்கள் மத்தியில் பதவி வெறி குடுமி பிடிச் சண்டைகள் அடிக்கடி தீவிரமாகியுள்ளன. இவற்றால் மாணவர்களின் நிம்மதியும் படிப்பும் பலிக்கடாக்களாக ஆக்கப்பட்டுள்ளன.

இலங்கை ஒரே நாடு என்ற வகையில் வடக்கு - கிழக்கின் அரசியல் பொருளாதார அம்சங்களில் நிலவும் நோய் பிடித்த நிலைமைகள். மக்களிடையே நிலவும் அச்சங்கள், சந்தேகங்கள், மற்றும் அரச அமைப்புக்களில் நிறைந்து போயிருக்கும் நிதி ஊழல் மோசடிகள் மேலும் இந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களின் அடிப்படை பொருளாதார துறைகளில் ஏற்படுத்தப்பட வேண்டிய முன்னேற்றங்கள் ஆகியன மீது இலங்கை அரசும் போதிய அக்கறை காட்டுவதாக இல்லை.

இராணுவத்தைக் குறைத்தல், முகாம்களை மூடுதல், காணிகளை திருப்பிக் கொடுத்தல், காணாமற் போனோரை தேடுதல், அரசியற் கைதிகளை விடுதலை செய்தல், சர்வதேச விசாரணை, விஷஊசி போடப்பட்டதா இல்லையா என ஆராய்ச்சி செய்தல் என்பன மட்டுமே தமிழர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் என இங்கு அரசியல் மற்றும் ஊடக அரங்கங்களில் பிரதானப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றி நாளும் பொழுதும் ஓலமிடுவது மட்டுமே தமிழர்களின் அரசியல் என் ஆக்கப்பட்டுள்ளது. அரசாங்கமும் இரக்கமாக கருணையுடன் தயாள மனங் கொண்டு அந்த விடயங்கள் பற்றி பேசிவிட்டால் - சில நடவடிக்கைகளை எடுத்துவிட்டால் போதும் என்ற போக்கையே கடைப்பிடிக்கிறது.

தமிழ்ச் சமூகம் எதிர்நோக்கும் அரசியல் அச்சங்ளைச் சொல்லிச் சொல்லியே தமிழ் அரசியற் தலைமைகள் தமது அரசியற் பதவிக் காலங்களை அனுபவிக்கின்றன. அரசாங்கமும் அந்த அச்சங்களை விரைவிற் போக்கி, வடக்கு தெற்கு என்ற பேத பாரபட்சம் இல்லாமல் சுதந்திரம், ஜனநாயகம், பொருளாதார செழிப்புகள் ஏற்பட நடவடிக்கைகள் எடுக்காமல் தமிழ் அரசியற் தலைவர்களின் தனிப்பட்ட தேவைகளை திரைமறைவில் திருப்திப்படுத்தினால் போதும் எனச் செயற்படுகிறது.

உள்ளும் புறமும் அரசியல் சமூக பொருளாதார நோய்களால் தாக்கப்பட்டிருக்கும் தமிழ்ச் சமூகத்திற்கு வாசனைகள் தடவி திருப்திப் படுத்தம் முயற்சிகளே இங்கு காணப்படுகின்றன. மாறாக நோய்களைக் குணப்படுத்தும் முயற்சிகளில் தமிழரசுத் தலைமைகளுக்கும் அக்கறையில்லை. அரசுக்கும் அது தேவைப்படவில்லை.



சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே
தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்த மென்போம்
நீதி நெறியினின்று பிறர்க்கு தவும்
நேர்மையர் மேலவர்: கீழவர் மற்றோர்.

## கொடுத்த வாக்குறுதிகள் ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

வவுனியாவில் விடுதி ஒன்றில் நடைபெற்ற பொது அமைப்புக்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு அறிவித்துள்ளார். வெறுமனே பாராளுமன்ற உறுப்பிணர்கள் மட்டுமல்ல தமிழ் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த முதலமைச்சர், மாகாணசபை அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் ஆகிய அனைவருமே பதவி விலக வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். 2016 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் தமிழ் இனத்தின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு கிடைக்காவிட்டால், அதற்கு திரு இரா. சம்பந்தன் மட்டுமல்ல தமிழ் கூட்டமைப்பின் பேரில் தேர்தல்களில் வெற்றி பெற்று பதவிகளில் அமர்ந்திருக்கின்ற அனைவருமே தமிழ் மக்களுக்கு பொறுப்புக் கூற வேண்டும் என திரு. ஜி. ரி. லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆயுதந் தாங்கி போராடிய இயக்கங்களின் தலைவர்கள் மட்டுமே மக்களுக்காக தங்களை தியாகம் செய்து உண்மையாகச் செயற்பட்டார்கள் என்றும், அவர்களைத் தவிர இப்போது பதவிகளைப் பெற்றுள்ள எவரும் மக்களின் நலன் கருதி உண்மையாகச் செயற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் வெறுமனே தேர்தல்களில் வாக்களிப்பதோடு மட்டும் தமது கடமை முடிந்துவிட்டதாக இருக்கக் கூடாது எனவும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் உண்மையாகவும் நேர்மையாகவும செயற்படுவதற்கு மக்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும், மக்களுடைய பிரதிநிதிகள் எப்போதும் மக்களுடைய தொடர்பில் இருக்கும் வகையாக செயற்பட வேண்டும் எனவும், அதை விடுத்து, தமிழ் மக்கள் ஒரு தடவை வாக்களித்துவிட்டு அடுத்து வரும் 5 வருடங்களுக்கு திட்டிக்கொண்டிருப்பதால் எந்தவித பயனையும் அடைய முடியாதெனவும் அவர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

திரு. ஜி. ரி. லிங்கநாதன் அவர்கள் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின், (புளொட்) உறுப்பினராவார் தமிழரசுக் கட்சியின் வீட்டு சின்னத்தின் ஊடாக அவர் மாகாணசபை உறுப்பினரானார். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட அவரது கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலும் உள்ளனர் அதேபோல மகாண சபையிலும் அவரது கட்சியை சார்ந்த வேறு சில உறுப்பினர்களும் உள்ளனர். லிங்கநாதன் அவர்களின் கருத்து அவரது கட்சியின் அரசியல் நிலைப்பாட்டின் பொதுக்கருத்தா அல்லது அவரது தனிப்பட்ட கருத்தா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டுக்குள் அரசியல் தீர்வு கிடைக்கும் வகையாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தேர்தல்களின் போது வாக்குறுதியளித்தபடி செயற்படவும், பொறுப்புக் கூறவும் வேண்டும் என்பதே அவரது கருத்துக்களில் வலியுறுத்தப்படுகின்றன என்பது பிரதானமானதாகும்.

## மூன்று ஆண்டுகளாகியும் ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தமது மாகாணசபை ஆட்சிமீது அடுத்தடுத்து எழுப்பி வரும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இப்போது மாகாண ஆட்சிக் கூட்டமைப்பினைச் சேர்ந்த மற்றொரு மாகாணசபை உறுப்பினரான திரு. சிவனேசனும் இணைந்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள முல்லைத் தீவு மக்களில் மூன்றிலொரு பகுதியினர் வறுமை நிலையில் இருப்பதாகவும் முல்லைத்தீவு மாவட்ட மக்களைப் பொறுத்தவரையில் வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளால் எதுவித பயனையும் உணர முடியாதுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டது முல்லைத்தீவு மாவட்டமும் முல்லைத்தீவு மாவட்ட மக்களுமே என்பது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

மேலும், கடந்த 3 ஆண்டுகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவிற்கு எந்த ஒரு அபிவிருத்தி நடவடிக்கையும் மத்திய அரசினாலோ அல்லது மாகாண சபையாலோ முன்னெடுக்கப்படவில்லை என திரு. க.சிவனேசன் தெரிவித்துள்ளார். கல்வி, சுகாதாரம், போக்குவரத்துப்பாதைகள் மற்றும் பயணிகளுக்கான வசதிகள், மீன்பிடித்துறை, வனவளம், வாழ்வாதாரத் திட்டங்கள் என்ற எந்தத் துறையிலும் முன்னேற்றங்கள் எதனையும் தம்மால் உணர முடியவில்லை எனவும் மாகாண சபை உறுப்பினர்களுக்கென ஒதுக்கப்படும் சிறிய அளவு நிதியைக் கொண்டு மேற்கொள்ளப்படும் சிறிய நடவடிக்கையைத் தவிர வேறெதுவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடப்பதில்லை எனவும் அவர் வேதனை தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் மத்திய அரசுக் குட்பட்ட திணைக்களங்களில் நிலவுகின்ற வெற்றிடங்களைப் பற்றிய எந்த விதமான தகவல்களும் கூட வடக்கில் உள்ள தமிழ் அரசியல் தலைவர்களிடம் கிடையாது எனவும் அவற்றைப் பெறுவதற்கான முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படுவதில்லை எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இதுவரை காலமும் மகாணசபை சபா மண்டபத்தினுள் முன்வைத்த தமது விமர்சனங்களை மாகாணசபை உறுப்பினர்கள் இப்போது ஊடகங்கள் வாயிலாக வெளியில் கூறுமளவிற்கு நிலமை மோசமடைந்துள்ளது

ஆனாலும், மாகாணசபை ஆட்சிக் கூட்டமைப்பில் இணைந்துள்ள இவர்கள் இவ்வாறாக என்னதான் குற்றச்சாட்டுகளைக் கூறி வருகின்ற போதிலும் இனியும் தேர்தல்கள் வரும் போது இதே கூட்டமைப்பு மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கு இவர்கள் மக்களிடம் வாக்கு கேட்கத்தானே போகிறார்கள் என்பதே தமிழ் அரசியல் வட்டாரங்களின் ஆதங்கம்.

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் சில துளிகள்

**போர் விதவைகள்**

யுத்தம் வட மாகாணத்தில் மாத்திரம் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விதவைகளை விட்டுச் சென்றுள்ளது. அவர்களுடைய திறனைக் கட்டியெழுப்புவதற்கும் இப் போர் விதவைகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்குமான தெளிவானதொரு கொள்கைக்கான தேவையொன்றுள்ளது. இவ் விதவைகள், பொருளாரார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர்.

எனவே, அவர்களது தற்போதைய துயர் நிலையைத் துடைப்பதற்கு வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டங்களையும் ஏனைய தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான பொறுப்பினை இம் மாகாணசபை விரைவாகவும் வினைத் திறனோடும் ஏற்றுச் செயற்படும்.

**தேசிய மற்றும் சர்வதேச உதவியுடனான அபிவிருத்தி**

யுத்தத்திற்குப் பிந்திய புனர்நிர்மாணத்திற்கு, யுத்தத்தின் பாதிப்புகளுக்கு தீர்வு காண்பதும் சந்தை நிறுவனங்களுக்கு உறுதுணை புரிவதும் அதன் மூலம் தனியார்துறை உற்பத்தியில் நீண்டகால வளர்ச்சிக்கான திறனை உருவாக்குவதுமான ஒரு ஒருங்கிணைந்த வறியோர் சார்பு அணுமுறை தேவை. இம் மாகாணத்தில் நிலவும் நீண்ட கால முதலீடு மற்றும் உதவி பிரச்சனைகளைத் தீர்த்துவைக்க ததேசுவ இலங்கை அரசுடனும் சர்வதேச சமூகத்துடனும் புலம் பெயர் தமிழர்களுடனும் இணைந்து செயற்படும்.

**முடிவுரை**

ஒரு மக்கள் கூட்டமென்ற வகையில் எமக்கேயுரிய தனித்துவத்தை பேணுகின்ற அதேவேளை, எமது மக்களின் வாழ்க்கை மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும். ஒரு மக்கள் கூட்டமென்ற வகையில் எமது அரசியல் உரிமைகளையும் நாம் மீட்டெடுக்க வேண்டும். எனவே, இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற பெயரின் கீழ் அதன் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்து இத் தேர்தலில் தமது உறுதியை எடுத்துக்காட்ட தைரியத்துடன் எழுந்து நிற்குமாறு தமிழ் பேசும் மக்களிடம் நாம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவில் மகளிர் கல்லூரி ஓர் தனியார் கல்லூரி. அந்தப் பாடசாலையின் நிர்வாகத்தை அதிபராகத் திறம்பட நடாத்தி வந்தவர் திருமதி சிராணி மில்ஸ். கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். நிறைவான கல்வித் தகைமைகளையும், ஆசிரிய பாண்டியத்தையும் கொண்டவர். அந்தக் கல்லூரியின் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மத்தியில் மட்டுமல்ல யாழ்ப்பாண ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் மத்தியிலும் மிகுந்த நற்பெயரைப் பெற்றுக் கொண்டவர் எனக் கூறப்படுகிறது.

# உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபர் விவகாரம் யாழ்ப்பாண கல்வி மரபுக்கு ஏற்பட்டுள்ள அவமானம்

அபிமன்யு

இவருக்கும், இப் பாடசாலையை நிர்வாகிக்கும் தென்னிந்தியத் திருச்சபை யாழ் ஆதீனத்தின் செயற்குழுவின் தலைவரான ஒரு மதகுருவுக்கும் இடையில் முன்னரேயே முரண்பாடுகள் இருந்ததாகக் கூறப்படுகிறது. பல வருடங்களுக்கு முன்னர், திருமதி சிராணி மில்ஸை வேலைநீக்கம் செய்யவேண்டுமென்ற அந்த மதகுருவின் பெரு முயற்சிகள், நீதிமன்றம் வரை சென்று, நீதிமன்றத்தின் தீர்ப்பினால் தடுக்கப்பட்டன. இப்பொழுது திருமதி சிராணி மில்ஸை அவர் ஓய்வு பெறும் வயதை எட்டி விட்டார் என்ற காரணத்தைக் காட்டி, அவரது சேவை நீடிப்புக்கான தகுதிகள் அவருக்கு இருக்கிறதெனினும், தென்னிந்தியத் திருச்சபை யாழ் ஆதீனத்தின் செயற்குழு அவரது சேவைக்காலத்தை நீடிக்க மறுத்துவிட்டது.

உடுவில் மகளிர் கல்லூரி மற்றும் அதன் சகோதர கல்லூரியான யாழ்ப்பாணக் கல்லூரியை நிர்வகிப்பதற்கு அமெரிக்கன் மிஷனரியினரால் அமெரிக்காவிலிருந்து ஆண்டுதோறும் நன்கொடையாக பெருந்தொகையான பணம் -கோடிக் கணக்கில்- அனுப்பப்படுவதாகவும் நம்பப்படுகிறது. ஆனால், இரண்டு கல்லூரிகளையும் நிர்வகிக்கும் இயக்குனர் சபையாகத் தொழிற்பட்டு வரும் தென் இந்தியத் திருச்சபையின் யாழ் ஆதீனத்தின் செயற்குழுவின் தலைமை பண விடயத்தில் வெளிப்படைத் தன்மை இல்லாமல் கையாள்வதாகவும், பணப் பட்டுவாடாக்களில் பல கேள்விக்குறிகள் இருப்பதாகவும், அப் பாடசாலைகளின் நலன்கள் கருதாது ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் மற்றும் நியமனங்களில் தமக்கு இசைவானவர்கள் அல்லது தமக்கு வேண்டியவர்களையே தெரிவு செய்யும் தன்னிச்சையான போக்கு காணப்படுவதாகவும் யாழ்ப்பாணத்தில் பரவலாகவே அபிப்பிராயங்கள் உள்ளன.

ஒரு காலத்தில் முதன்மை ஸ்தானத்தில் இருந்த இப்பாடசாலையின் தரம் வீழ்ச்சியடைந்துவிடும் என்ற பயம் மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் ஏற்பட்டுள்ளது. இந்த நிர்வாக சபையில் அப்பாதிரியாரின் மனைவியும், சகோதரனும், மற்றும் அவருக்கு வேண்டியவர்களும் நியமிக்கப்பட்டிருப்பது, அங்கு நிலவும் பாரபட்சத்தைக் கோடிட்டுக் காட்டுவதாகவும், தன்னிச்சையான செயல்களுக்கும், ஊழல்கள் புரிவதற்கும் வாய்ப்பாக அமைத்துக் கொள்ளப்படடிருக்கும் நிலைமைகளைச் சுட்டிக் காட்டுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுகிறது. யாழ்ப்பாணக் கல்லூரியில் குமைந்து கொண்டிருக்கும் இந்த விடயமே உடுவில் மகளிர் கல்லூரியில் வெடித்து வெளிவந்திருக்கிறது என அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

தமக்கு வேண்டாதவர்கள்தான் மாணவிகளைத் தூண்டி விட்டாரகள் என்று நிர்வாக சபையின் தலைவர் கூறியிருக்கிறார்.

மாணவிகள் ஜனாதிபதியின் காலில் விழுந்து அழுது மனு கொடுக்கும் நிலைமை ஏற்பட்டமை, அமைதியை நிலைநாட்டுவதற்கு பொலிஸார் அழைக்கப்பட்டமை கல்லூரியின் வரலாற்றுப் பெருமைக்கு ஏற்பட்ட களங்கம். ஏந்த நிறுவனத்திலும் பிரச்சினைகள் ஏற்படுவது வழக்கம். ஆனால், ஒரு கல்வி நிறுவனத்தில் அப்படி ஒரு பிரச்சினை வரும்போது சம்பந்தப்பட்ட சமூகத்தினரும், தொடர்புள்ள அதிகாரிகளும், சமூக அரசியற் தலைமைகளும் மாணவர்களின் காதுகளுக்கோ, அவர்களது பெற்றோர்களின் கவனத்துக்கோ அந்தப் பிரச்சினை எட்டி அது தொடர்பாக அவர்கள் உள்ளிழுக்கப்படுவதற்கு முன்னர் அப்பிரச்சினை ரகசியமாகவும் சுமுகமாகவும் தீர்க்கப்படுவது அவசியமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் இந்த தென்னிந்தியத் திருச சபையின் சட்ட ஆலோசகர் என்றும், அந்தப் பாதிரியாருக்கு மிகவும் நெருக்கமானவர் என்றும், கல்லூரி நிர்வாக விடயத்தில் சுமந்திரனுக்கு கணிசமான செல்வாக்கு உள்ளதாகவும் அறியப்படுகிறது. இவ்விவகாரத்தை சுமந்திரனுக்கு எதிரான அரசியல் பிரசாரமாகவும் சில ஊடகங்கள் பயன்படுத்தி கல்லூரியின் பெயரை நாறடித்தன.

தனியார் கல்லூரி விவகாரங்கள் மாகாண சபையின் அதிகாரத்துக்கு உட்படட்டதல்லவெனினும் இவ்விடயத்தில் மாகாணசபை அக்கறையற்று இருந்தமை வேதனைக்குரிய ஒன்றாகும்.

கடைசியாக, பாதிக்கப்பட்டவர்கள் இவ்விடயத்தில் அக்கறை காட்டிய அக்கல்லூரியின் மாணவிகளே. அந்த மாணவிகள் மீது காட்டுமிராண்டித் தனமாக நடந்து கொண்ட ஆசிரியர்கள் கல்லூரி நிர்வாகத்திடம் நல்ல பெயர் எடுத்துக் கொண்டார்கள். பழைய அதிபர் பிரச்சினையைத் தொடராமல் இளைப்பாறிப் போய்விட்டார். கல்லூரி மீதான குற்றச்சாட்டுகள் எல்லாம் பழங்கதைகளாகிப் போய்விட்டன. ஆனால், தமது நல்ல கல்விக்



காக குரல் எழுப்பிய மாணவிகள் அந்தக் கல்லூரியை விட்டுப் போகவும் முடியாமல், அந்தக் கல்லூாயில் அவர்கள் எந்த வேளையிலும் எந்த வகையிலும் பழி வாங்கப்படமாட்டார்கள் - அவமானப்படுத்தப்பட மாட்டார்கள் என்ற உத்தரவாதமுமின்றி அந்தக் கல்லூரியிலேயே தமது கல்வியை அச்சத்துடனும் சந்தேகங்களுடனும் தொடர வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டு உள்ளனர்.

இந்தக் கட்டுரையாளரை ஈர்த்த பொருத்தமான கவிதை வரிகள். மறைந்த தமிழகக் கவிஞன் ஞானக்கூத்தனால் எழுதப்பட்டவை:

"எல்லாம் இறுதியில் பழகிப்போய் விடும்
நினைவில் இருக்கிறதா
ஏமாற்றத்தின் துரோக முட்கள்
உன்னைக் கிழித்த அந்த நாட்களை
எப்படி உரக்கக் கூவினாய் யாரோ
கூக்குரல் கேட்டு வருவார் என்பதால்
எவ்வளவு விரைவில் தெரிந்து கொண்டாய்
பதிலில்லாக் கேள்வி உன் கூக்குரலென்று-
கொஞ்சம் கொஞ்சமாய்
எல்லாம் இறுதியில் பழகிப்போய்விடும்"

# முஸ்லிம் மக்களின் அபிலாஷை என்ன?

**வசந்தம் தொலைக்காட்சி சேவையின் அதிர்வு நிகழ்ச்சிக்கு 25.09.2016 அன்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் பஷீர் சேகு தாவூத் அவர்கள் வழங்கிய செவ்வியிலிருந்து வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பாகவும், முஸ்லிம் மக்களின் கோரிக்கை தொடர்பாகவும் தெரிவித்த கருத்துக்கள்.**



அதிர்வு : அஷ்ரப் அவர்களது 16 வது சிரார்த்த தினம் நடைபெற்றிருந்தது. மொழி முன்னால் எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பது அஷ்ரப் அவர்களின் எண்ணமாயிருந்ததாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் குறிப்பிட்டிருந்தார். இப்போது வடக்கு கிழக்கு பிரிப்பு வடக்கு கிழக்கு இணைப்பு சம்பந்தமான விடயங்கள் அதிகமாகப் பேசப்படுகிறது இந்த விடயங்களில் உங்களுடைய கருத்து எவ்வாறானதாக இருக்கிறது.

பஷீர் சேகு தாவூத்: இன்று பார்த்தேன், முஸ்லிம்கள் அரசியலுக்காக மதத்தை தூக்கிப் பிடிக்கிறார்கள் ஆனால், அவர்களுடைய மொழி தமிழ் என வட மாகாண முதலமைச்சர் மட்டக்களப்பில் பேசியிருக்கிறார். நான் அரசியலில் அப்படி வளர்க்கப்படவில்லை. எனது வழிகாட்டிகளாக, தோழர்களாக செயற்பட்டவர்கள் மொழி பற்றிச் சொல்லவில்லை. ஈரோஸ் ஈழம் என்றுதான் அழைக்கும் தமிழீழம் என்று அழைப்பதில்லை. இரட்ணசபாபதி மிக அழகாக அமெரிக்காவில் பேசுகிற மொழி ஆங்கிலம் ஆங்கில அமெரிக்கா என்றில்லை. இந்த உலகத்தில் நடந்த மிகப்பெரிய போராட்டம் பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் அங்கு பேசுகின்ற மொழி அரபு. ஆனால் அரபு பாலஸ்தீனம் கோரவில்லை என்று சொல்வார். அவர்களின் பாசறையில் ஆரம்பத்தில் கல்வி கற்றவன் நான். தமிழ் மொழி மீது அன்பு, பற்று அதைக் கற்றுக்கொள்கிற ஆர்வம் எல்லாம் இருக்கிறது. ஆனால், மொழியை அடிப்படையாக வைத்து தேசிய இனத்துவ அடையாளத்துக்குள் அது போனது அதனோடு பட்டும் படாமலும், ஒட்டியும் ஒட்டாமலும் இருந்தோம்.

வடக்கு கிழக்கு இணைப்பு பிரிப்பு சம்பந்தமான விடயங்களில் வடக்கு கிழக்கு இணைந்தே இருக்க வேண்டும் என்பது தமிழ் மக்களுடைய விருப்பம். வடக்கு கிழக்கு இணைந்தால் முஸ்லிம் களுக்கு என்ன என்பது தமிழ் தரப்பு சொல்ல வேண்டும் என்பது முஸ்லிம்களுடைய விருப்பம். இதைத்தான் அஷ்ரப் அவர்கள் சொன்னார். ஒரு சமூதாயம், ஒரு இனம் அது தன்னுடைய போராட்டத்தில் அது சாத்வீக போராட்டமாயிருக்கலாம், வன்முறை சார்ந்த போராட்டமாயிருக்கலாம் எப்படியிருந்தாலும் அந்த போராட்டத்தினுடைய கோரிக்கை என்று ஒன்றிருக்கும். முஸ்லிம்களுடைய கோரிக்கை முஸ்லிம்களுக்கான தனிஅலகு, அது அஷ்ரப்பே வைத்ததுதான்.

வடக்கு கிழக்கு இணைப்பு பிரிப்பு சம்பந்தமாக என்ன செய்வதென்று தமிழர் தலைமையும் முஸ்லிம்களின் தலைமையும் பேச வேண்டும். இரகசியமாக ஒழித்துவைத்து நாடகமாடுகின்ற விஷயம் அல்ல என்பது தான் எனது கருத்து. தமிழர்களுடைய உண்மையான அபிலாஷையை முஸ்லிம்கள் எதிர்க்கக் கூடா [illegible] தமிழர்கள் எதிர்க்கக் கூடாதென்ற அடிப்படையிலும் இரண்டு தரப்பும் இணைந்து ஒரு தீர்வுக்கு வரலாம். சிங்கள மேடைக்கு அல்லது சர்வதேச மேசைக்கு தமிழ் முஸ்லிம்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்கு போடுவதற்கு முன்னால் நாம் இரு தரப்பும் பேச வேண்டும். இதனை பல தடவை சொல்லியிருக்கிறேன். இதற்கு உண்மையில் இவர்கள் தயாரில்லை.

அதிர்வு : கிழக்கிலே பல கட்சிகள் கிழக்கு பிரிய வேண்டும் எனக் குரல் கொடுக்கிறார்கள் முன்னாள் அமைச்சர் அத்தாவுல்லா, தற்போதைய பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா அவர்கள், உள்ளிட்ட பலர் கிழக்கு பிரியவே வேண்டும் வடக்கும் கிழக்கும் இணைந்தால் கிழக்கிற்கு சுதந்திரம் கிடையாது என்று அவர்களுடைய கருத்துக்களை பதிவு செய்கிறார்கள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் கூட அவருடைய கருத்தை பதிவு செய்துள்ளார். ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் தரப்பிலிருந்து வடக்கு கிழக்கு இணைப்பு, பிரிப்பு தொடர்பான எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. என்ற ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது இதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

பஷீர் சேகு தாவூத்: இந்த விடயம் தர்க்கரீதியாக பிழை. ஏற்கனவே பிரிந்துதான் இருக்கிறது. வடக்கு கிழக்கை மீண்டும் இணைப்பதற்கு முஸ்லிம்களுக்கு நிபந்தனைகள் உள்ளது. தமிழர்களுடைய அரசியல் அபிலாசையில் மிக முக்கியமானது- அதிகாரத்திற்கும் மேலாக- அலகு என்பது அந்த அலகில் பெரும்பாலும் ஒன்றாக வாழக்கூடிய தமிழர்கள் ஒன்றிணைந்து இருக்க வேண்டும் என்பது அவர்களின் விருப்பமாயிருந்தது. தலைவர் அஷ்ரப் சொன்னார் அவர்களின் அரசியல் அபிலாசைக்கு எதிராக இல்லாமல் இதில் எங்களுக்கு என்ன என்று கேட்பதில் தான் தனி அலகு என்பது உருவானது. என்னைப்பொறுத்தவரையில் முஸ்லிம் காங்கிரசின் வேலை அஷ்ரப்பின் கொள்கையை நிலைநிறுத்துவதுதான். முஸ்லிம் காங்கிரஸ் கடமையைச் செய்யவில்லை என்பதை அதன் தவிசாளராகச் சொல்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுக தமிழ் நிகழ்ச்சி தமிழர்களின் முன்னேற்றத்துக்கு உதவுமா?

எஸ். சுகிர்தன் — சாவகச்சேரி

**கேள்வி: வடக்கு மாகாண முதலமைச்சரால் அண்மையில் நடத்தப்பட்ட எழுக தமிழ் நிகழ்ச்சி தமிழர்களின் முன்னேற்றத்துக்கு உதவுமா? "உள்ளதையும் கெடுத்தான் நொள்ளைக் கண்ணன்" என்பது போல பின்னடைவுகளுக்கே வழிவகுக்குமா?**

**பதில்:** ஏன் எழுக 'தமிழ்'? .... தமிழ் 'நல்லாக'த் தானே இருக்கிறது: தமிழ் தமிழகத்திலும், இலங்கையிலும், மலேசியாவிலும், சிங்கப்பூரிலும், இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து மேற்கத்தைய நாடுகளில் வாழும் இன்றைய தலைமுறைத் தமிழர்களாலும் பேசப்பட்டும், எழுதப்பட்டும், வளர்க்கப்பட்டும் வருகிறதே!. எனவே, தமிழை எழப் பண்ணுவதற்காக 'எழுக தமிழ்' இருக்க முடியாது. அதுவும் யாழ்ப்பாணத்தில் பேரணி வைக்கும்படியாக!.

அது 'எழுக தமிழர்' என்பதாகத்தான் இருக்க முடியும். அந்த நிகழ்ச்சிக்காக யாழ்ப்பாணத்துக்கு வெளியே இருந்து சில நூற்றுக்கணக்கானோர் ஏற்றி இறக்கப்பட்ட போதிலும் அது யாழ்ப்பாணத் தமிழர்களை எழ வைப்பதற்கான நிகழ்ச்சியாகவே அமைந்தது. யாழ்ப்பாண பாரம்பரியத்துக்கே உரிய, வழமை போல கிழக்கிலிருந்து விசேடமாக வரவழைக்கப்பட்ட ஒரு சில பிரமுகர்களைத் தவிர, இலங்கையில்- உள்ள ஏனைய மாகாணங்களில் உள்ள தமிழ் மக்களுக்கும், அதுவும் குறிப்பாக, கிழக்கு மாகாண மக்களுக்கும் அந்த நிகழ்ச்சிக்கும் எதுவித தொடர்பும் இருக்கவில்லை.

'எழுக' என்றால் நாம் 'வீழ்ந்து' கிடக்கின்றோம் என்பது தானே பொருள்?.- வீழ்ந்து கிடந்தால்த்தானே 'எழுக' என்று சொல்ல நேரிடும். நாம் வீழ்ந்து கிடக்கின்றோம் என்றால், அதற்கான காரணங்கள் என்ன? 'எம்மை நாமே இடறி விழுத்தியதாலா? அல்லது 'மற்றவர்கள் எம்மை இடறியோ, இழுத்தோ, தள்ளியோ விழுத்தியதாலா? நாம் வீழ்ந்து கிடக்கின்றோம்.

தமிழர்கள் தம்மைத் தாமே இடறி விழுத்தியதனால் தான் தமிழர்கள் வீழ்ந்து கிடக்கின்றார்கள் என்றால், அதற்கான காரணங்களாக, இது வரையில் தமிழர்கள் சென்ற - செல்ல வேண்டிய பாதையைச் சரியாகத் தேர்ந்தெடுக்காமற் செயற்பட்ட தமிழர்களின் அறிவீனம் அல்லது தமிழர்களை தவறாக அழைத்துச் சென்றவர்களின் அறிவின்மை, அல்லது அவர்களின் விசமத்தனம், அல்லது அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி அக்கறையற்ற மூர்க்கத்தனம் ஆகியவைகளாகவே இருக்க முடியும்.

என்ன 'அவலம்' பார்த்தீர்களா!—எந்த அறிவின்மையால் நாம் இடறி விழுந்தோமோ, அந்த அறிவின்மையைப் போக்காமல் இன்னமும். உணர்ச்சி மூடர்களாக அதே பாணியைத்தான், பாதையைத்தான் 'எழுக தமிழ்!' என்று சொல்லிக் கொண்டு பின்பற்றுகிறோம். அத்துடன், இந்தக் கோஷத்தை முன்வைக்க இப்பொழுது முன் வந்தவர்களில் ஏறத்தாழ அநேகரின் பின்னணியைச் சற்றுப் பின்னோக்கிப் பாருங்கள். - அந்தப் பாணியில், அந்தப் பாதையில் தமிழர்களை வீர வசனங்கள் பேசிப் பேசி தமிழர்களை முள்ளிவாய்க்கால்வரை கூட்டிச் சென்று தமிழர்களை விழுத்தியவர்கள் தான் - தமிழர்கள் வீழ்ச்சி பெறக் காரணமான அதே சூத்திரதாரிகளில் அநேகர்தான் இப்பொழுது எழுக தமிழின் முக்கியஸ்தர்கள், பிரபல்யங்கள்!.

இப்போது அவர்களுடன் ஒரு 'புதிய பெரியவரும்' சேர்ந்து கொண்டார் - வேறோரு வடிவில் 'பழைய பெரியவருக்கு' பதிலீடாக!.

## அபிமன்யு பதில்கள்

அபிமன்யு பதில்கள் கேள்வி பதில் பகுதிக்கு உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி :

**அபிமன்யு பதில்கள்**
**கண்ணோட்டம்**
**இல: 294 A, கண்டி வீதி**
**யாழ்ப்பாணம்**

விழுத்துபவர்களே 'எழுங்கள்' என்றால், அவர்கள் அப்படிச் சொல்வதற்கு அவர்களுக்கு இன்னமும் தொடர்ச்சியான தேவைகள் இருக்கின்றன என்பதை தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும் அப்படியானவர்கள் வகுக்கும் பாதையைப் பின்பற்றுவது பைத்தியக்காரத்தனம் என்பது உணரப்பட வேண்டும. துவறான உள் நோக்கம் கொண்ட அவர்கள் தமிழர்களை சரியான பாதையில் அழைத்துச் செல்லமாட்டார்கள் என்பதைத் தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவர்கள்தான் பாரதி சொன்ன 'நடிப்புச் சுதேசிகள்':—

"நெஞ்சில் உரமு மின்றி நேர்மைத் திறமு மின்றி
வஞ்சனை சொல்வா ரடி - கிளியே!
வாய்ச் சொல்லில் வீர ரடி
கூட்டத்திற் கூடிநின்று கூவிப் பிதற்ற லன்றி
நாட்டத்திற் கொள்ளா ரடி - கிளியே!
நாளில் மறப்பா ரடி!"

முன்னர் 'பொங்கு தமிழ்' என்று கூத்தடித்து தமிழர்களை முள்ளிவாய்க்கால் வரை கொண்டு சென்று அழித்தார்கள். இப்பொழுது யாழ் முற்றவெளியில் மறுபடியும் அதையே ஆரம்பித்திருக்கிறார்கள்!.

பொங்கு தமிழுக்கே அந்தக் கதி என்றால் எழுக தமிழ் எம்மாத்திரம்!

அதே நாடகம் - அதே வசனங்கள் - அதே நடிகர்கள் - என்ன ஒரு சின்ன மாற்றம்: பழைய நடிகர்கள் பலர் நந்திக்கடலோடு இல்லாமற் போய்விட்டார்கள், இப்பொழுது வயது முதிர்ந்த ஒரு நடிகர் புதிதாகச் சேர்ந்திருக்கிறார். கதாநாயகனா, வில்லனா என்று அவருக்கே தெரியாது. நாடகம் பார்ப்போர்க்கும் பிடிபடவில்லை!.

நாடகம் பார்க்கப் போகிறவர்களே கவனம்! நாடகம் முடிந்து நீங்கள் பசியோடு வீடு திரும்பும் போது உங்கள் அடுப்படிச் சட்டியில் விட்டுப் போன மிச்சச் சோறும், கறியும் கள்ளப் பூனைகளாலும், கவர்ச்சிப் புலிகளாலும், காட்டுச் சிங்கங்களாலும் கபளீகரம் செய்யப்பட்டிருக்கும்! காலி செய்யப்பட்டிருக்கும்!.

இவர்கள் திடீரென தமிழர்களின் ஆபத்பாந்தவர்களாக மாற்றம் பெற்று விட்டார்கள் என நினைக்காதீர்கள்- இவையெல்லாம் அடுத்த தேர்தலுக்கு, அடுத்த வேட்பாளர் பட்டியலுக்கான முஸ்தீபுகள் - அவ்வளவுதான்! எழுக தமிழ் என்று கூறிக்கொண்டே தமிழர்களை உண்மைகளை நோக்கி எழ முடியாது செய்கிறார்கள்!. பெரிய கட்சியின் வேட்பாளர் பட்டியலில் இடம் கிடைத்து விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள் – கோபதாபம் அனைத்தும் பஞ்சாய்ப் பறந்து விடும்! தமிழ் எழுந்தால் என்ன, கிடந்தால் என்னவென பாய்ந்து போய்விடுவார்கள்.

அது சரி! முக்கியமாக 'எழுக வடக்கு மாகாண சபை' என்றல்லவா வடமாகாண முதலமைச்சர் செயற்பட்டிருக்க வேண்டும். வடமாகாண சபை அமைச்சர்கள் மீது மக்களால் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது, அவற்றை விசாரிக்க ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு தமாஷ் அறிக்கை விட்டாரே! - வடக்கு மாகாண சபை ஆட்சி செயலூக்கம் அற்று படுத்துக் கிடக்கிறது என சமீபத்தில கணக்காய்வாளர்களின் அறிக்கையொன்றும் கோடிட்டுக் காட்டியிருக்கிறதே!.

எப்போ 'எழுக வடக்கு மாகாண சபை' பேரணி?

**அபிமன்யு அண்மையில் கேள்விப்பட்டு ரசித்த ஒரு கவிதை வரி**

"தீக்குளித்த சீதையால் நிருபணமானது
இராவணின் கற்பு"

# ஊதிப் பெருத்த விஷ ஊசி விவகாரம்

தமிழர்கள் மத்தியில் திகில் எழுப்பும் விதமாக கிழப்பப்பட்ட எந்த விடயத்துக்குத்தான் இதுவரை விடை கிடைத்திருக்கிறது. மனிதாபிமானம் அவலங்களெல்லாம் இங்கு அரசியலாக்குவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. தீர்வுகாணப்பட வேண்டிய அவசியமான விடயங்கள்கூட இங்கு வெற்றுக் கூச்சல்களுக்கும் விரயமான விவாதங்களுக்கும் உள்ளாக்கப்பட்டு இறுதியில் குழப்பியடிக்கப் பட்டவையாகப் போய்விடுகின்றன. காரிய சித்த இலக்குடன் மானசீகமான இதயசுத்தியுடன் பிரச்சினைகளைக் கையாளாமல், உண்மைத்தன்மைகளை நிருபிக்கத் தவறியும், சரியானதும், பொருத்தமானதும், நியாயமானதுமான நிவாரணங்களையும், தீர்வுகளையும் பெறுவதற்கு முயற்சிக்காமலும், அவரவரது நோக்கத்துக்கு பயன்படும் வகையாக வசமாகக் கிடைக்கும் விடயத்துக்கு வகை வகையாக உணர்ச்சி முலாம் பூசி இலாபம் தேடுவதே இங்குள்ள தமிழ்த் தேச அரசியல்வாதிகளினதும், பிரமுகர்களினதும் வழமையாகி உள்ளது. இதற்கிடையில் அந்த விடயங்களை வைத்து அரசியல் ஆதாயம் மட்டுமல்ல நிபுணத்துவமாக பொருள் ஆதாயங்களையும் தேடிக் கொள்கிறார்கள்.

தமிழர்களின் எந்தப் பிரச்சினைக்காவது இதுவரை குறைந்த பட்சமாயினும் திருப்தி அளிக்கக் கூடிய ஏதாவது தீர்வு காணப்பட்டிருக்கிறதா? அல்லது அவ்வாறான தீர்வுகளை நோக்கி நேர்மையான முன் நகர்வுகள் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா?

- சுன்னாகம் குடிதண்ணீர் பிரச்சினை!
- இரணைமடு நீர் விநியோக விவகாரம்!
- வடக்கில் பொருளாதார மையம் உருவாக்கல்!
- மாங்குளத்தில் மாகாண சபை செயலகம்

ஏன காணாமற் போன பல தொடர் கதைகள் இங்கு உள்ளன.


சிங்கள அரசியற் தலைமைகள் இந்த போலி தமிழ்த் தேசவாத அரசியற் தலைமைகளின் நடிப்பு - செயலின்மை - வெற்றுக் கூச்சல் என்பன பற்றி நன்றாகவே தெரிந்து புரிந்து வைத்திருக்கிறார்கள். இலங்கை மீது அக்கறை கொண்ட சர்வதேச நாடுகளின் தலைமைகளுக்கும் குறிப்பிட்ட தமிழ்த் தலைமைகளின் போலித்தனம் நன்கே தெரியும்.

விஷ ஊசி மூலம் முன்னாள் புலிப் போராளிகளுக்கு நஞ்சூட்டப்பட்டதாக தமிழ்த் தேச அரசியல் நடிகர்களும், அவர்களுக்கு மகுடி ஊதும் தமிழ் ஊடகங்களும் இப்போது ஒன்றுமே அறியாதது போல மௌனமாகி விட்டன. வீராவேச விவாதங்கள் நடாத்திய வடக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சு அதனது பரிசோதனை அறிக்கைகளை எங்கே மறைத்துவிட்டது என்பது தெரியாமலே போய்விட்டது. இது தொடர்பாக ஆய்வு செய்த வைத்தியர்கள் குழுவொன்று தமக்கு போதிய ஆதாரம் கிடைக்கவில்லை என அறிவித்துவிட்டது. குறிப்பிட்ட போராளிகளோ தமது புதிய வாழ்வுக்கு ஆக்கபூர்வமாக எதுவுமே செய்யாத தமிழ் அரசியல்வாதிகள் தமது வாழ்வை சங்கடப்படுத்தும் விதமாக செயற்பட வேண்டாமென பகிரங்கமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மறைந்தவர்களுக்கு "மாவீரர் இல்லம்" அமைக்க அரசாங்கம் அனுமதிக்கவில்லை, "மாவீரர் தினத்தைக் கொண்டாட" அரசாங்கம் விடவில்லை என்றெல்லாம் குரலெழுப்புவர்கள் தமிழர்களின் விடுதலைக்காக தங்களை அர்ப்பணித்த எண்ணங்களுடன் தமது வாழ்வைத் தியாகம் செய்த போராளிகளை நிம்மதியாக வாழ விடக் கூடாது என்பதில் கங்கணம் கட்டி நிற்கிறார்கள். செத்தவர்களை வைத்து பிழைப்பவர்கள் உயிரோடு இருப்பவர்களை வாழ விடக் கூடாது என்பதற்காக திட்டமிட்டு உருவாக்கப்பட்டதுதான் விஷ ஊசியா? இதுதான் இப்போது எழுந்துள்ள கேள்வி.

**- அபிமன்யு -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோழர் ராஜன்
மயிலிட்டி

தமிழ் இனத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை வேண்டியும்
ஜனநாயக உரிமைகளை மீட்டெடுப்பதற்குமான போராட்டத்தில்

தம் உயிரை அர்ப்பணித்த, தோழர்கள், ஆதரவாளர்களை

# நினைவு கூருவோம்

போராட்டத்தில் உயிர்நீத்த அனைவரதும் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது அவர்கள் விட்டுச் சென்ற பணியை, நம்பிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவோம்



த. தம்பிராசா
நுணாவில்

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| ஆ. சுரேஸ்குமார் | ஜீவா | 22.10.1989 | வளலாய் |
| | சாமி | 04.10.1988 | இடைக்காடு |
| நாகேந்திரஜோதிராஜா | ராஜன்,அமீன் | 15.10.1989 | மயிலிட்டி |
| பொ. சிறிதரன் | | 00.10.1990 | மயிலங்காடு |
| க. மார்க்கண்டு | | .. .10.1990 | மட்டுவில் |
| த. தம்பிராசா | | 23.10.1989 | நுணாவில் |
| யோகதாசன் | திலகன் | 16.10.1986 | |
| எஸ். சுதாநிதி | சுதா | 18.10.1985 | காரைதீவு |
| எஸ் .பிள்ளைநாயகம் | கிருபா | 18.10.1985 | குருமண்வெளி |

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| ஏ. செல்வகுமார் | குணம் | 22.10.1985 | கல்லாறு |
| ஏ.தேவநாதன் | நிர்மல் | 10.05.1985 | மண்டூர் |
| எஸ். சிவப்பிரகாசம் | ரஞ்சித் | 05.10.1987 | களுவன்கேணி |
| பி.சின்னத்தம்பி | கருவல் | 24.10.1989 | நாசிவன்தீவு |
| என். சூட்டி | கெஸ்ரின் | 17.10.1989 | பேத்தாளை |
| எஸ்.ஆறுமுகம் | மதி | 17.10.1989 | நாசிவன்தீவு |
| ஆர் வீரசிங்கம் | சேகர் | 26.10.1989 | சித்தாண்டி |
| கே.சத்தியசுவநாத் | வாலா | 26.10.1989 | காத்தான்குடி |

**தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் பங்கேற்று செப்ரெம்பர் மாதத்தில் உயிர் நீத்த தோழர்களில், எம்மால் திரட்ட முடிந்த தோழர்களின் பெயர் விபரங்களை மட்டுமே இங்கே பிரசுரித்துள்ளோம். இங்கு நினைவு கூரப்பட்டுள்ள தோழர்களின் விபரங்களை பூரணப்படுத்த பங்களிப்புச் செய்வதுடன் இங்கு பிரசுரிக்கத் தவறிய, தோழர்கள் பற்றிய தகவல்கள் அவர்களது புகைப்படங்கள் என்பவற்றை எமக்குக் கிடைக்கச் செய்யுமாறு அன்பர்கள், நண்பர்கள், குடும்பத்தவர்கள், தோழர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.**

## தகவல் அறியும் உரிமையும் ஜனாதிபதியின் உரையும்

ஜனநாயகத்தின் உயிர்மூச்சு தகவல்கள் தான். தமது சமூகத்தில் நடைபெறுவதை மக்கள் அறிய முடியாமல் அவர்களை நிர்வகிப்பவர்களின் நடவடிக்கைகள் மூடி மறைக்கப்படுமாயின், மக்களால் அந்த சமூகத்தின் செயற்பாடுகளுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க முடியாமல் போகும்.

தகவல்கள் மக்களின் தேவை மாத்திரமன்றி நேர்த்தியான அரசாங்கமொன்றின் அத்தியாவசிய பண்புமாகும். மோசமான அரசுகளுக்கு தமது இருப்புக்காக வேண்டியே இரகசியம் தேவைப்படும். முறைகேடு, வீண்விரயம், ஊழல் என்பவற்றுக்கு இது வழிவகுக்கும்.

ஜனநாயகத்தை அடிப்படையாகக்கொண்ட அதற்குச் சமாந்திரமான சுதந்திர வெகுஜன தொடர்பு ஊடகங்களைக் கொண்ட ஒரு நாடு தவறுகளால் அழிந்ததில்லை என்கிறார் நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென். தகவல் தெரிந்து கொள்ளும் சுதந்திரம் அரசாங்கத்தின் செயற்பாட்டை பரிசோதிக்கும் வாய்ப்பை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கிறது. அத்தோடு அந்தச் செயற்பாடு குறித்த விவாதத்துக்கான அடிப்படையையும் அது வழங்குகிறது.

ஜனநாயக சமூக அமைப்பில் நாமே அரசாங்கத்தை அமைக்கிறோம். எம்மால் தெரிவுசெய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் மூலமாக நாம் அதைச் செய்கின்றோம். அரசாங்கத்தினதும் பொது அமைப்புக்களினதும் செயற்பாடுகள் எமது பணத்தின் மூலம் எமக்காகவே நடைபெறுகின்றன.

அந்த செயற்பாடுகள், எமது தேவைகளுக்கு ஏற்ப நிகழும் விதத்தில் முடிவுகளை எடுக்கவும் அவற்றில் பங்குகொள்ளவும் எம்மால் முடியுமாக இருப்பது அவசியம். இதற்காகவேண்டி அந்த விடயங்கள் குறித்த தகவல்களை நாம் அறிந்திருக்க வேண்டும்.

**(மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 2001 இல் வெளியிட்டுள்ள கைநூலிலிருந்து)**

சர்வதேச தகவல் அறியும் தினத்தை முன்னிட்டு கொழும்பு, ஜெய்ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் (28.09.2016) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார். அவரது கருத்துக்கள் நம் கவனத்திற்குரியவையாகும்.

தகவல் அறிவது மனிதனின் அடிப்படை உரிமையாகும் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி கடந்த அரசாங்கத்தினால் இயலாமல் போன தகவல் அறியும் உரிமை சட்டத்தை பல்வேறு தடைகளுக்கு மத்தியில் தற்போதைய அரசாங்கம் 19 ஆவது திருத்தத்தினூடாக நிறைவேற்ற முடிந்தது எனத் தெரிவித்துள்ளார்.

அரச பதவிகளில் இருப்பவர்களில் அதிகமானோர் தமக்கு உரிய பொறுப்புக்களை புறந்தள்ளி தமக்கு சம்பந்தமில்லாதவற்றை செய்கிறார்கள். நாட்டை முன்னேற்ற வேண்டுமானால் தமது பெறுப்புக்களை அவர்கள் சரிவரச் செய்ய வேண்டும். அரச செலவினங்களுக்காக பொதுமக்களின் நிதியைப் பயன்படுத்தும் போது ஏற்படும் முறைகேடான பயன்பாடுகள், தவறான நிதிமுகாமைத்துவம் காரணமாக நாட்டு மக்களுக்கு இழைக்கப்படும் அநீதி, நாட்டின் முன்னேற்றத்திற்கு ஏற்படும் தடைகள் என்பவற்றை தகவல் அறியும் உரிமையை சமூகத்தின் அடிப்படை உரிமையாக உத்தரவாதப்படுத்துவதன் மூலம் இல்லாமலாக்க முடியும்.

1947 முதல் எத்தனை சட்டங்கள், சட்டமூலங்கள் கொண்டுவரப்பட்டபோதும் அவற்றில் எத்தனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன? என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நோக்கங்கள் நிறைவேற செயற்பாடு வேண்டும்

ஊடக சுதந்திரச் சட்டம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் ஊடக நிறுவனங்கள் எத்தனை தங்கள் நிறுவனங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்களுக்கு எழுத்துச் சுதந்திரத்தை வழங்குகிறார்கள்? என்று கேள்வி எழுப்பிய ஜனாதிபதி அதிகமான ஊடகங்கள் உரிமையாளர்களினதும், முகாமைத்துவத்தினதும் விருப்பு வெறுப்புக்கள், நோக்கங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பவையாக உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலமை மாறவேண்டும் நாட்டு மக்களின் நலனுக்காக ஊடக சுதந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிப்படைத் தன்மை அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் வேண்டும். அரச சார்பற்ற நிறுவனங்கள் பற்றிய தகவல் அறியும் உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அரசசார்பற்ற நிறுவனங்கள் பதிவு செய்யும் போது குறிப்பிடும் நோக்கங்களுக்குப் புறம்பாக செயற்படுகின்றன. இதனால் அவர்கள் செயற்படும் நாடுகளிலுள்ள அரசுகள் பல்வேறு சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். [illegible]

### கல்வியில் ஏற்பட்டுள்ள பின் ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

பகிரங்கமாக குற்றஞ்சாட்டியுள்ளார். இலங்கையில் 9 மாகாணங்கள் மட்டுமே உள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கல்வித்துறையில் 40 வருட காலம் பணியாற்றிய, அதாவது ஆசிரியராக, அதிபராக, வலயக் கல்விப் பணிப்பாளராக, மாகாண கல்வி அமைச்சின் உதவி செயலாளராக என நீண்ட காலம் கல்வித் துறையில் தொழில் புரிந்து இப்போது கிழக்கு மாகாணத்தின் கல்வி அமைச்சராக உள்ள திரு. சி. தண்டாயுதபாணியின் காலத்திலேயே கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலைமை முன் எப்போதும் இல்லாத அளவிற்கு மிகவும் வீழ்ச்சி நிலையை கண்டிருக்கிறது என இரா. துரைரெட்ணம் கவலை வெளியிட்டுள்ளார்.

நுண்கலை துறை பட்டதாரிகள் அதாவது நாடகம், அரங்கியல், நடனம், சங்கீதம் என நுண்கலைத்துறையில் பட்டம் பெற்றவர்கள் 500 க்கும் மேற்பட்டோர் கிழக்கு மாகாணத்தில் வேலைவாய்பின்றி நீண்ட காலமாக ஏங்கித்தவிப்பதாக அவர் தெரிவித்துள்ளார். தமிழர்களின் கலாச்சார விடயங்களை, பண்பாடுகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதுகாப்பதிலும், பராமரிப்பதிலும் பங்களிக்கக் கூடிய ஆற்றல் வாய்ந்த இந்தப் பட்டதாரிகள் தமது வாழ்க்கைக்கான ஏதாவதொரு வேலைவாய்ப்பேனும் கிடைக்காதா என வீதிகளில் இறங்கிப் போராட வேணடிய சங்கட நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறாக, கிழக்கு மாகாணத்தின் கல்வித் துறையில் முன்னேற்றத்துக்கும், தமிழர்களின் கலை கலாச்சார பாதுகாப்புக்கும் பராமரிப்புக்கும் வேண்டிய கடமைகளை மேற்கொள்ளும் பொறுப்பு கிழக்கு மாகாணத்தின் தமிழ் அமைச்சராக உள்ள தமிழரசுக் கட்சிக்காரரான திரு. தண்டாயுதபாணிக்கே உரியதாகும் எனவும் அந்த விடயத்தில் திரு. தண்டாயுதபாணி பொறுப்பற்ற விதமாக நடந்து கொள்ளுகிறார் எனவும் அதே தமிழரசுக் கட்சியை மாகாண சபையில் பிரதிநிதித்துவப் படுத்தும் திரு. இரா. துரைரத்தினம் கருத்து வெிளியிட்டுள்ளார்.

திரு. தண்டாயுதபாணி தமது கட்சிக்காரராக இருந்த போதும் தமிழ் மக்கள் தொடர்பான தண்டாயுதபாணியின் பொறுப்பில்லா நடத்தையை திரு. இரா. துரைரட்ணம் துணிச்சலோடு அமபலப் படுத்தியுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

இருப்பினும், இதே இரா. துரைரட்ணம் தனது கட்சிக்கார அமைச்சரை குற்றஞ்சாட்டுவதற்கு மேலதிகமாக கிழக்கு மாகாணத்தின் கல்வி முன்னேற்றத்துக்காக என்ன செய்திருக்கிறார்? அடுத்த தேர்தலிலும் இதே தமிழரசுக் கட்சியின் வேட்பாளராக போட்டியிடுவதற்கான கனவுடன் தானே இவர் உள்ளார்? எனவும் தனது சொந்தத் தேவைகளுக்காக இதே தமிழரசுக் கட்சியை மீண்டும் ஆட்சி அதிகாரத்தில் இருத்துவதற்காகத் தானே அடுத்த தேர்தலிலும் இதே துரைரட்ணம் வாக்குக் கேட்கப் போகிறார் எனவும் எனவே, திரு. துரைரட்ணத்தின் குமுறல் உண்மையானதா? போலித்தனமானதா? என கிழக்கு மாகாண கல்வியாளர்கள் சந்தேகங்கள் கொண்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஜனநாயத்தைப் பலப்படுத்துவது பொதுத் தேவையாகும்

**அன்பார்ந்த வாசகர்களே.**

லண்டன் கடிதம் தொகுத்து வழங்குபவர் வி. சிவலிங்கம்

**லண்டன் கடிதம் இம்முறை பிரித்தானியாவில் காணப்படும் சமூக ஜனநாயக அரசியல் விவாதங்கள் குறித்த செய்திகளைத் தாங்கி வருகிறது. இக் கடிதம் பல்வேறு தரப்பாரின் கைகளைச் சென்றடைவதால் அதற்கான பொறுப்போடு கருத்துக்களை எடுத்துச் செல்லவேண்டியுள்ளது. மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் போன்றோர் சமீபத்தைய பொருளாதார மாற்றங்களுடன் அரசியல் மாற்றங்களும் எவ்வாறு இணைந்து பயணிக்கிறது? என்பதனை அவ்வப்போது அறிந்து கொள்வது பயனுள்ளதாக அமையும் எனக் கருதி சற்று ஆழமான அரசியல் செய்திகளையும் அவ்வப்போது தர விரும்புகிறேன்.**

## பிரித்தானியாவில் கட்சிகளின் மாநாடுகள்

தற்போது பிரித்தானியாவில் அரசியல் கட்சிகளின் வருடாந்த மாநாட்டுக் காலமாகும். தேர்தல்கள் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை இடம்பெற்று வருகின்ற போதிலும், அரசின் செயற்பாடுகள் சரியான திசையில் செல்கிறதா? என்பதை அறியவும், தேவைப்படின் பாதையை மாற்றுவதற்கான அழுத்தங்களை அதிகரிப்பதற்கும் உள்ள ஜனநாயக பொறிமுறையாக இந்த மாநாடுகள் அமைகின்றன. அரசின் கொள்கைகளுக்கு அல்லது செயற்பாடுகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள், கட்சி மாநாடுகள் என்பன அரசின் போக்கை மாற்றுவதற்கான நடைமுறைகளாக உள்ளன. எனவே, கட்சி மாநாடு என்பது தேர்தல் ஆணையாளரின் நெருக்கடிகளுக்காக நடத்தப்படும் சடங்காக அல்லாமல் இங்கே ஜனநாயக அரசியலின் அங்கமாக உள்ளன.

பிரித்தானியாவில் கோடை விடுமுறை ஆரம்பமானதும் பல்வேறு கொண்டாட்டங்கள், திருமணங்கள், களியாட்டு விழாக்கள் நடப்பது போலவே கட்சிகளின் அரசியல் மாநாடும் பிரதி வருடமும் செப்டெம்பர் மாதம் முதல் அக்டோபர் மாத காலப்பகுதியில் மூன்று வாரங்கள் நடைபெறும். இம் முறை இம் மாநாடு பல விதங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. அதுவும் குறிப்பாக பிரதான கட்சிகளான கன்சவேட்டிவ் மற்றும் தொழிலாளர் கட்சிகள் அரசியல் ரீதியாக பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியிருந்தன.

### கன்சவேட்டிவ் மாநாடு

ஆளும் கட்சியான கன்சவேட்டிவ் கட்சி ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதா? அல்லது தொடர்ந்து இருப்பதா? என மக்களிடம் வாக்கெடுப்பிற்கு விட்ட போது வெளியேறுவதற்கு ஆதரவாக பெருமளவு மக்கள் வாக்களித்தார்கள். ஐரோப்பிய ஒன்றியத்தில் சுமார் 40 வருடங்களுக்கு மேலாக இணைந்திருந்த பிரித்தானியா அதற்கு ஏற்ற வகையில் பல சட்ட மாற்றங்களையும் ஏற்படுத்தியிருந்த நிலையில் தற்போது வெளியேற முடிவு செய்துள்ளதால் அவ் வெளியேறும் முடிவை நிறைவேற்றுவதில் பல சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது. வாக்கெடுப்பை நடத்துவதற்கு முடிவு செய்த முன்னாள் பிரதமர் டேவிட் கமரன் இணைந்திருப்பதற்கு ஆதரவாகவே பிரச்சாரம் செய்தார். ஆனால் மக்கள் வெளியேறுவதற்கு ஆதரவாக வாக்களித்தமையால் தம்மால் தொடர்ந்து பிரதமராக செயற்பட முடியாது எனக் கருதி பதவியை ராஜினாமாச் செய்ததோடு அரசியல் வாழ்விலிருந்தும் ஒதுங்கினார். ஆளும் கன்சவேட்டிவ் கட்சி புதிய பிரதமராக திருமதி. திரேசா மே அவர்களைப் பிரதமராக தெரிவு செய்தது. கன்சவேட்டிவ் கட்சி மாநாடு புதிய பிரதமரின் கொள்கைகளை அறிவதற்கான தளமாக அமைந்தது.




### தொழிற் கட்சி மாநாடு

பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சியானது புதிய தலைவருக்கான தேர்தலை நடத்தியது. அத் தேர்தலில் இடதுசாரிக் கொள்கைகளை மையமாகக் கொண்ட ஜிரமி கோபன் அவர்கள் வெற்றி பெற்றார். கட்சியின் புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்ட ஜிரமி கோபன் அவர்களுக்கும் இம் மாநாடு புதிய கொள்கைகளை அறிவிக்கும் தளமாக அமைந்தது. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனநாயகக் கட்சி வேட்பாளர் தெரிவில் பலத்த போட்டி நிலவியது. அமெரிக்க அரசியல் வரலாற்றில் முதன் முறையாக சோசலிச கொள்கைகளை நடைமுறைப்படுத்தப் போவதாகக் கூறி போட்டியிட்ட ஒருவராக பேர்னி சான்டேர்ஸ் காணப்பட்டார். மிகப் பெரும்பான்மையான இளைஞர், யுவதிகள் அவரை ஆதரித்தனர். ஜனநாயக் கட்சி வேட்பாளராக போட்டியிட்ட கிலரி கிளின்டன் அதிக வாக்குகளைப் பெற்ற போதிலும் பேர்னி சான்டேர்ஸ் அமெரிக்க அரசியலில் பெரும் அரசியல் மாற்றத்திற்கான விதைகளைத் தூவியுள்ளார். இதேபோன்ற அரசியல் விவாதங்களே பிரித்தானியாவிலும் ஜிரமி கோபன் அவர்களால் முன்வைக்கப்படுகின்றன.

### பிரிட்டிஷ் பொருளாதாரக் கொள்கை

இலங்கை போன்ற நாடுகளின் பொருளாதாரம் அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகளின் பொருளாதாரத்தோடு மிகவும் இணைக்கப்பட்டிருப்பதால் இந் நாடுகளில் ஏற்படும் அரசியல் மாற்றங்கள் மிக அதிக அளவில் இலங்கையின் பொருளாதாரத்தைப் பாதிக்கின்றன. எனவே இந் நாடுகளில் நடத்தப்படும் அரசியல் வாதங்கள், அணுகுமுறைகள் குறித்து நாம் அதிக கவனம் செலுத்தவேண்டியுள்ளது. அது மட்டுமல்லாமல் இந் நாடுகளில் காணப்படும் அரசியல் நடைமுறைகள் எவ்வாறு இந் நாட்டு மக்களைப் பாதிக்கிறது? என்பதை இங்கு நடைபெறும் கட்சி மாநாடுகள் எமக்கு உணர்த்துகின்றன.

தற்போது பிரித்தானியாவில் கன்சவேட்டிவ் கட்சி சுமார் 5 ஆண்டுகளாக பதவியில் உள்ளது. இக் கட்சியின் கொள்கைகளின் தாக்கங்கள் குறித்து தொழிற்கட்சி முன்வைக்கும் வாதங்கள் இலங்கைக்கும் பொருந்தும் என்பதால் அவற்றில் சிலவற்றை உங்கள் கவனத்திற்குத் தருகிறேன்.

மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கு அரசு பணம் ஒதுக்குவதைக் குறைத்துள்ளது. இது குறிப்பாக பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளில் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை தனியார் நிறுவனங்கள் வைத்தியசாலைகளை, பாடசாலைகளை நடத்த ஊக்குவித்து வருகிறது. நாட்டின் பொருளாதாரம் என்ன திசையில் செல்கிறது? என்பதை அரசால் கூற முடியவில்லை. நாட்டின் கடன் அதிகரித்துள்ளது. உற்பத்தி குறைந்துள்ளது. வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது. வேலை வாய்ப்புகள் இல்லை. கிடைக்கும் வேலைகள் நிரந்தரமில்லை. அதிகளவு சிறுவர்கள் வறுமையில் வாழ்கிறார்கள். பணக்கார நாடு எனக் கூறும் நாட்டில் சிறுவர்கள் பட்டினியால் வாழ்வதை ஏற்க முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. லாபத்தை அதிகரிப்பதற்காக தொழிலாளர்களுக்கான ஊதியம் வெளிநாட்டுத் தொழிலாளர் வருகையால் வெட்டப்படுகிறது.

இவ்வாறு அரசின் பொருளாதாரக் கொள்கைகளை விமர்சிக்கும் தொழிலாளர் கட்சி மாற்று யோசனைகளையும் முன் வைக்கத் தவறவில்லை. தாம் பதவிக்கு வந்தால் சுமார் 250 பில்லியன் ஸ்ரேர்லிங் பணத்தினை நாட்டின் உற்பத்தியில் முதலீடு செய்யப்போவதாக கூறுகிறது. அபிவிருத்தி முதலீட்டு வங்கி ஒன்றை உருவாக்கி சிறு வர்த்தகத்தினை ஊக்குவிக்கப் போவதாகவும், தொழிலாளர்களின் ஊதிய உயர்வு, ஓய்வூதியம், கூட்டுறவு உற்பத்தித் துறைகள் போன்றவற்றில் முதலீடு செய்யப் போவதாகவும் கூறுகிறது

## சமூக அரசியற் பண்பாட்டு வளர்ச்சியின் முன்னேற்றகரமான ஒரு கட்டமே - சமூக ஜனநாயகம்

பிரித்தானியாவில் இயங்கும் அரசியற் கட்சிகளின் மாநாட்டில் விவாதிக்கப்படும் பிரச்சினைகளை உங்கள் கவனத்திற்குத் தருவதற்குக் காரணம் ஜனநாயகம் என்பது 5 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் தேர்தலால் மட்டும் நிர்ணயிக்கப்படுவதல்ல. அரசின் கொள்கைகள், அதனால் ஏற்படும் தாக்கங்கள் என்பவற்றை அரசிற்கு உணர்த்துவதற்கான வழிமுறைகளாக இம் மாநாடுகள் உள்ளன. நாட்டில் எதிர்க்கட்சி மட்டுமல்ல, சமூக இயக்கங்கள், தொழிற் சங்கங்கள் என பல அமைப்புகள் விழிப்புடன் செயற்படுகின்றன.

பிரித்தானியா உட்பட பல நாடுகளில் செயற்படும் கட்சிகள் அடிப்படையில் சமூக ஜனநாயக கட்சிகளாகும். அதாவது சமூகத்தின் மத்தியிலே ஜனநாயக விழுமியங்களைப் பலப்படுத்தும் நோக்கம் கொண்டவை. சட்ட ரீதியான ஆட்சி, பிரதிநிதித்துவ ஆட்சி, பாராளுமன்ற ஜனநாயகம், குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்தல் எனப் பலமான அடிப்படைகளை வற்புறுத்துகின்றன. அவ்வாறானால் பல கட்சிகள் ஏன் உள்ளன? என்ற கேள்வி எழலாம். அரசியற் பொருளாதார அபிவிருத்தி மாற்றங்களின் விளைவாக சமூகக் கட்டமைப்பில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளால் நேசமாகவும் பகைமையாகவும் முரண்பட்டு நிற்கும் வர்க்கங்களின் வடிவங்களிலும் பண்புகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதனால், அவ்வவ் வர்க்கங்கள் தத்தம் வர்க்க நலன் சார்ந்து சமூக ஜனநாயகத்தை வெவ்வேறு விதங்களில் விபரிக்கின்றன. உதாரணமாக சமூகத்தின் ஒட்டுமொத்தமான வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு பணக்காரர்கள் மீது வரி விதிக்க வேண்டுமென ஒரு கட்சி வாதிக்கிறது. ஏனெனில் பலமான, ஆரோக்கியமான தொழிலாள வர்க்கம் இருந்தால் தான் பொருளாதாரம் சமச்சீராக அமையும் என்கின்றனர். ஆனால், இன்னொரு சாரார் பணக்காரர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட வேண்டும். ஏனெனில் அவர்களின் சேமிப்பு அதிகரிப்பதால் முதலீடு அதிகரித்து, வேலை வாய்ப்பு பெருகும் என்கின்றனர்.

இவ்வாறு சமூக ஜனநாயகம் நாட்டின் மக்கட் பிரிவினர் இடையே வெவ்வேறு விதங்களில் அர்த்தப்படுகிறது. புரட்சிகர அமைப்பாக தன்னை ஆரம்பத்தில் அறிமுகப்படுத்திய ஒரு கட்சி இன்று தன்னை ஓர் சமூக ஜனநாயக் கட்சியாக மாற்றிக்கொண்டமைக்கான பின் புலங்கள் கடந்த 30 ஆண்டுகளில் இலங்கையில் செயற்பட்ட திறந்த பொருளாதாரத்தின் விளைவுகளிலிருந்தே நோக்கப்பட வேண்டும். ஒரு பலமான மத்திய தர வர்க்கம் போரினூடாக வளர்ந்திருக்கிறது. கூடவே மிகவும் நொய்ந்துபோன உழைக்கும் வர்க்கமும் வாழ்கிறது. இதுவே நாட்டின் பெரும்பான்மையாகவும் உள்ளது. பொருளாதாரக் கட்டமைப்பும் அதிகாரக் கட்டமைப்பும் பணக்காரர்களின் ஆயுதங்களாக இருக்கையில் தொழிலாள வர்க்கத்தை, அதன் போராட்டங்களை முளையிலே கிள்ளுவது இலகுவாக அமைகிறது. தமிழ் மக்களின் விடுதலை, வர்க்க விடுதலை என நடத்தப்பட்ட போராட்டங்களின் போது வர்க்க ஒற்றுமை என்பது ஏற்படவில்லை. ஏனெனில் ஒடுக்கும், ஒடுக்கப்படும் வர்க்கங்கள் இனவாதத்திற்குள் கட்டுண்டு கிடந்தன. இவ் இரு வர்க்கங்களும் ஜனநாயகமற்ற இருளுக்குள் தள்ளப்பட்டிருந்தன. அத்துடன் இரு சாராருக்கும் ஜனநாயகத்தின் தேவை அதிகமாக இருந்தது.

எனவே, நாட்டில் சமூக ஜனநாயத்தைப் பலப்படுத்துவது பொதுத் தேவையாகும். இதன் வெளிப்பாடாகவே தொழிலாளர் புரட்சியை வற்புறுத்திய ஜே வி பி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி போன்ற கட்சிகள் இன்று தம்மை ஓர் சமூக ஜனநாயக கட்சியாக மாற்றிக் கொண்டுள்ளதை அவதானிக்கலாம். இவை சிறிய கட்சிகளாக இருக்கலாம். ஆனால், இக் கட்சிகளே எதிர்காலத்தை தீர்மானிக்கும் காத்திரமான வழிகாட்டுதல்களைத் தரும் கொள்கை, கோட்பாடுகளைக் கொண்டிருப்பதையும் காணலாம். சமூக ஜனநாயக அடிப்படைகள் ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை மக்களுக்கு வழங்கும் போது ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தின் அவசியத்தையும் அவை உணர்த்திச் செல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியல் யாப்பில் வரூஉம் – ஆனா வராஆது •••

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

சாங்கம் வடக்கு கிழக்கு இணைப்பு தவிர்ந்த ஏனைய அடிப்படையான விட யங்கள் தொடர்பாக சம்பந்தரோடு ஒரு திட்ட வட்டமான உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டது பரகசியம்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைய விடக் கூடாது என்பதில் சிங்களத் தலைவர்களும் முஸ்லிம் தலைவர்களும் உறுதியாக உள்ளனர். ஒரு நீடித்து நிற்கக் கூடிய அரசியற் தீர்வுக்கு வடக்கும் கிழக்கும் இணைந்திருக்க வேண்டுமென சம்பந்தர் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார் என்றே கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன. அதற்காக அமைச்சர் ஹக்கீமுடனும் சம்பந்தர் ஒரு சுமுகமான முடிவை எட்ட ரகசியமாக தொடர்ந்து முயற்சித்தார் என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால், வடக்கு முதலமைச்சரின் "எழுக தமிழ்" எழுப்பிய உணர்ச்சிகளை தெற்கின் இனவாதம் அதற்கு வசதியாகத் தூக்கி வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பாக அரசாங்கத்துடன் சம்பந்தர் பேசுவதை நிறுத்தும் வகையாக முத்தாகவே ஆப்பு வைத்து விட்டது.

சங்கு நல்லது தானே! அல்ல அல்ல அது கூடாதது! சங்கில் இருந்து எழுந்தது தமிழ் ஆராதனையே! அல்ல அல்ல அது அவல ஓலமே! என்பதெல்லாம் வேறு விடயங்கள். ஆனால், இங்கு சும்மா கிடந்த சங்கை எடுத்து ஊதிக்கெடுத்தான் ஓர் ஆண்டி என்பதே எழுக தமிழின் விளைவு.

## 13 ஆவது திருத்தத்தின் அனுபவம் பாடமாகட்டும்

அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தத்தில் கூறப்பட்டவற்றை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்பதே இந்தியா உட்பட அனைத்து சர்வதேச நாடுகளினதும் கோரிக்கை. ஆனால், இந்தியா உட்பட எந்தவொரு நாடும் இலங்கை அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தப்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வுகளின் எந்தெந்த விடயங்களை எவ்வெவ்வாறாக நிறைவேற்ற வேண்டுமெனச் சொல்வதற்குத் தயாராக இல்லை என்பதே யதார்த்தம். எனவே, விரும்பியோ! விரும்பாமலோ! தென்னிலங்கை மக்களில் பெரும்பான்மையினரின் நல்லெண்ணத்துக்கு அளவாகவே இங்கு தமிழர்களுக்கான அரசியற் தீர்வு அமையும் என்கின்ற நிலையே உள்ளது. இதுவே தமிழர்களின் இன்றைய அரசியற் தலைவிதி.

இந்திய அரசியல் யாப்பில் எவ்வாறு மாநில அரசுகளுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்டனவோ அதேவகையாகவே-பெரும்பாலும் அதே வகையான வார்த்தைகள் மற்றும் வாக்கியங்களைக் கொண்டதாகவே இலங்கையில் மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன. ஆனால், அவை இலங்கையில் நிறைவேற்றப்பட்ட விதம் எவ்வகையானது என்பது அனைவரும் அறிந்த ஒன்றே.

அரச நிலங்கள், காடுகள், நதிகள், நதிகளால் நீர் பெறும் நிலங்கள், கடல்கள், கடற்கரைகள், ஏரிகள், குட்டைகள் தவிர்ந்த குளங்கள், பனைகள், தென்னைகள் என்பவற்றில் எவையும் மாகாண சபைகளுக்கு உட்பட்டவையல்ல.

பொலிஸ் நிர்வாகம், அரசாங்க அதிபர் உட்பட கிராம சேவகர் வரையான பொது நிர்வாகம், உள்;ராட்சி அமைப்புகள் ஆகியன கொழும்பு மைய அரசாங்கத்துக்கு உட்பட்டதாகவே இதுவரை செயற்படுகின்றன.

கொழும்பிலிருந்து கிடைக்கும் நிதியைக் கொண்டு, கொழும்பிலிருந்து அடையாளம் காட்டப்படும் திட்டங்களுக்கு, கொழும்பிலிருந்து வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைய செலவு செய்வதற்கே மாகாண சபை ஆட்சி அமைப்பு என்பதே இதுவரையான அனுபவம்.

13வது திருத்தத்தின்படி மாகாண சபையின் சட்டங்களை நிறைவேற்ற மாகாண சபை ஆட்சிகளுக்கென நிறுவனங்கள் எதுவும் கிடையாது என்பதால் மாகாண சபையின் சட்டங்கள் நடைமுறையாவது மத்திய அரசின் விருப்பத்திலேயே தங்கியுள்ளது.

அரசியல் யாப்பின் 13வது திருத்தத்தில் இணைக்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு அட்டவணைகளில் ஒன்றான பொது நிரலின்படி உள்ள விடயங்களில் மத்திய ஆட்சிக்கும், மாகாண சபை ஆட்சிக்கும் பொதுவானவை எனக் கூறப்பட்டாலும் மத்திய ஆட்சியினர் விரும்பினால் மட்டுமே மாகாண ஆட்சிகளுக்கு அதிகாரங்கள் கிடைக்கும். அப்படி அதிகாரங்கள் கிடைத்தாலும் அவற்றுற்காக மத்திய ஆட்சி நிதி வழங்கினால் மட்டுமே அவ்விடயங்களில் மாகாண ஆட்சிகளால் செயற்பட முடியும் என்பதே கடந்த கால பாடம்.

மாகாண சபைக்கென வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தொடர்பான நிறைவேற்று அதிகாரங்கள் 13 ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைகள் சட்டப்படி மாகாண ஆளுநருக்கே உள்ளதாக மாகாண சபைக்காரர்களாலும் அங்கீகரிக்கப்பட்டது. அதனால், வேலைவாய்ப்புகளை வழங்குதல், அரச ஊழியர்களின் இடமாற்றங்கள், அவர்கள் தொடர்பான ஒழுங்காற்று நடவடிக்கைகள் என்பன ஆளுநரின் அதிகாரத்துக்கு உட்பட்டவையாகவே உள்ளன. இங்கு மாகாண ஆளுநர் ஒப்புக் கொண்டால் மட்டுமே இவ்விடயங்களில் மாகாண அமைச்சர்கள் தலையிட முடியும் என்ற நிலையே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

## பிரதமரின் தெளிவான அறிவிப்புகள் உண்மைகளாகுமா?

இவ்வாறாக பல்வேறு அனுபவம் 13ஆவது திருத்தம் தொடர்பாக ஏற்கனவே இலங்கைக்கு உள்ளது. ஒற்றையாட்சி, வடக்கு - கிழக்கு இணைக்கப்படாமை, பௌத்த மதத்துக்கான முன்னுரிமை போன்ற விடயங்கள் ஒருபுறமிருக்க, மாகாணங்களுக்கான அதிகாரங்கள் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் வழங்கப்படுமெனவும், அத்துடன் மாகாணங்களுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் வேறோரு வகையாக பறிக்கப்படுகின்ற நிலை இருக்காது எனவும் பிரதமர் ஏற்கனவே பகிரங்கமாக அறிவித்துள்ளார். அவை மிகவும் பிரதானமான விடயங்களாகும். இருப்பினும், பிரதமரின் அந்த உத்தரவாதம் எவ்வாறான வார்த்தைகளில், வாக்கியங்களில், பத்திகளில் உண்மையானவைகளாக அமையப் போகின்றன என்பது அரசியல் சட்டத்தை ஆக்கப்போகும் நியுணர்களினதும், அவற்றை அக்குவேறு ஆணிவேறாக ஆராய்ந்து பிரதமரின் உத்தரவாதத்தை உண்மையாக்க வேண்டிய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் முயற்சிகளிலேயே தங்கியுள்ளது.

புதிய அரசியல் யாப்பில் "பொது நிரல்" இடம்பெற மாட்டாது எனப்படுகிறது. அப்படியானால் 13 ஆவது திருத்தத்தின் பொது நிரலில் கூறப்பட்டுள்ள விடயங்கள் புதிய அரசியல் யாப்பின்படி எங்கே போகப் போகின்றன?

ஆளுநர் - முதலமைச்சர் உறவு, பொலிஸ் நிர்வாகம், பொது நிர்வாகம், அரச நிலங்கள், உள்ளூராட்சி அமைப்புகள், மாகாண ஆட்சிக்கு உட்பட்ட அமைப்புக்களுக்கான அரச ஊழியர்கள் தொடர்பான அதிகாரங்கள், மாகாணங்களில் விவசாயத்துறை, மீன்பிடித்துறை, உற்பத்தித் தொழிற் துறைகள், கல்வித்துறை, மருத்துவ சேவை நிறுவனங்கள், போக்குவரத்துத் துறை, உல்லாசத்துறை போன்றவற்றின் அபிவிருத்திகள் ஆகிய தொடர்பாக மாகாண சபைகள் சுயாதீனமாகவும் காத்திரமாகவும் செயற்படுவதற்கு அவசியமான அதிகாரப் பகிர்வுகள் மற்றும் நிதி வள மூலங்கள் எந்தளவு தூரம் புதிய அரசியல் யாப்பில் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் இருக்கப்போகின்றன?

இவ்வாறான கேள்விகள் இன்னமும் பதில்களின்றி தொக்கியே நிற்கின்றன.

## தமக்கு மூக்கு போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனம் பிழைத்தால் சரி என்போர்

சம்பந்தர் தலைமையிலான பாராளுமன்ற தமிழ்ப் பிரதிநிதிகளை பலயீனப்படுத்துவதில் விக்கினேஸ்வரன் தலைமையிலான மாகாண அமைச்சர்கள் தலை குத்தி நின்று செயற்படுகிறார்கள் அதேவேளை, முதலமைச்சரை அர்த்தமற்றவராக ஆக்குவதற்காக மாவை சேனாதிராஜா – சுமந்திரன் கூட்டத்தினர் ஆளுநரோடு கூட்டுச் சேர்ந்து செயற்படுகின்றனர். தமிழர் தேசம், தமிழர் இறைமை, சுயநிர்ணய உரிமை என்றெல்லாம் தமிழ் மக்களை உசுப்பேத்தி தேர்தல்கள் ஒவ்வொன்றிலும் கூட்டாக நின்று தமிழ் மக்களின் வாக்குளைப் பெற்று பதவிக் கட்டில்களில் ஏறியவர்கள் இப்போது தமிழ் மக்களைப் பிளவுபடுத்தி 13 ஆவது திருத்தத்துக்குள்ளால் கிடைத்திருந்தவற்றைக் கூட தமிழர்களுக்கு கிடைக்காமல் ஆக்குவதற்கு வேட்டியை மடித்துக் கட்டி கங்கணம் கொண்டு செயற்படுகிறார்கள்.

## இலவு காக்கும் கிளிகளா தமிழர்கள்?

இலங்கையின் ஆட்சி அமைப்புக்களில் தமக்கு உரித்தான அதிகாரப் பங்குகள் பற்றியோ அல்லது இலங்கையின் அரச அமைப்புகளில் உரிமை பூர்வமாக தாங்கள் கொண்டிருந்திருக்க வேண்டியவற்றை இதுவரையும் அடையாமற் போனது பற்றியோ தமிழ் மக்கள் மத்தியில் அடிப்படையான புரிதலோ சுயவிமர்சனங்களோ காணப்படவில்லை.

புதிய அரசியல் யாப்புக்கான பிரேரணை பாராளுமன்றத்துக்கு வந்தாலும் கூட, 2000 ஆம் ஆண்டு சந்திரிகாவின் அரசியல் யாப்புப் பிரேரணைக்கு நிகழ்ந்த அதேகதி போல மைத்திரி-ரணில் அரசாங்கத்தின் அரசியல் பிரேரணையின் தலைவிதியும் அமையக் கூடும். அதே வேளை பாராளுமன்றம் ஏதிர்பார்த்திருக்கின்ற புதிய அரசியல் யாப்புக்கான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டாலும் அதில் அரசியல் அதிகாரப் பகிர்வுக்கான விடயங்கள் உள்ளடக்கப்படாமல் அவ்விடயங்கள் பற்றி அரசாங்கம் தொடர்ந்து அனைத்துக் கட்சிகளோடும் பேசவுள்ளது என அதிகாரப் பகிர்வு விடயம் காலம் தள்ளிப் போவதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

தத்தமக்கான சலுகைகளுக்காகவும் வசதிகளுக்காகவும் அலைகின்றவர்களையே தலைவர்களாகவும் பிரதிநிதிகளாகவும் தமிழர்கள் கொண்டிருக்கின்றார்கள். அவ்வாறானவர்களால் தமிழர்களுக்கு சுதந்திரமும் கிடைக்காது, சுய நிர்ணய உரிமையும் கிடைக்காது. மாறாக, இன்று நிலவுகின்ற யதார்த்தத்தில், தமிழர்களின் பொது நலன்களுக்கும் சிங்களத் தலைவர்களின் சுயநலன்களுக்கும் இடையில் ஒரு சமநிலை ஏற்படுவதற்கு எந்த அளவு சாத்தியங்கள் நிலவுகின்றனவோ அந்த அளவுக்கே எதிர்வரவுள்ள புதிய அரசியல் யாப்பில் அரசியற் தீர்வுக்கான அதிகாரப் பகிர்வு அமையப் போகின்றது என்பதே உண்மை. சரி பிழைகளுக்கப்பால் யதார்த்தம் அதுவே

இந்த விடயம் சம்பந்தர் - சுமந்திரனுக்கும் தெரியும். வடக்கு முதலமைச்சரும் இதைப் புரிந்து கொள்ள முடியாதவரல்ல. சுமந்திரனிடமிருந்து தனக்கு உரிய குரு மரியாதை கிடைக்கவில்லை என்பதனாலும், அரசாங்கம் தனக்கு தனி மரியாதை தராததனாலும் வடக்கு முதல்வர் சுயநிர்ணய உரிமை கொண்ட இறைமையுள்ள சமஷ்டியைத் தவிர வேறெதனையும் தமிழ் மக்கள் ஏற்கக் கூடாது என உசுப்பேத்தி வருகிறார். மறுபக்கம், புதிய அரசியல் யாப்பில் ஓர் அரசியற் தீர்வுத் திட்டத்தை அரசாங்கத்திடமிருந்து ரகசியமான உறவுகள் மூலம் பெற முனைகின்ற சம்பந்தர்- சுமந்திரன் கூட்டத்தினர் எவ்வாறானதொரு அரசியத் திட்டம் சாத்தியமாகப் போகிறது என்பதைப் பற்றித் தமிழ் மக்கள் மத்தியில் உண்மையாகப் பேசாமல், அதைப் பற்றிய தெளிவான புரிந்துணர்வை தமிழ் மக்களுக்கு அளிக்க முற்படாமல், தாங்கள் ஏதோ யாராலும் இதுவரை சாதிக்க முடியாதவற்றை ரகசியமாகச் சாதிக்கப்போவது போல பாவனை காட்டி வருகிறார்கள்.

நடைமுறையில் என்ன நடக்கப்போகிறது என்பது சம்பந்தர் -சுமந்திரன் கூட்டமைப்பினருக்கு நன்கு தெரிந்திருக்கும். இருந்தும் விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள அரசியற் குழப்பத்தை சமாளிப்பதற்காக சம்பந்தர் - சுமந்திரன் கூட்டமைப்பினர் தமிழ் மக்கள் மத்தியில் "தமது கோரிக்கையும் சமஷ்டியே" என்றும், "சுய நிர்ணய உரிமையே தமது நிலைப்பாடு" என்றும், "வடக்கு கிழக்கு இணைப்பு விடயத்தில் தாம் விட்டுக் கொடுக்கப் போவதில்லை" என்றும் நடத்தி வரும் அரசியற் சித்து விளையாட்டு மிக மோசமான ஏமாற்று வித்தையாகும். அதீதமான நம்பிக்கைகளை ஏற்படுத்திவிட்டு பின்னர் "அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிப்படி நடந்து கொள்ளவில்லை" என்பதோ "அரசாங்கம் ஏமாற்றி விட்டது" என்பதோ தமிழ் மக்களை மீண்டும் ஓர் அரசியல் விபத்துக்குள்ளாக்கும் விபரீதமாகவே முடியப் போகின்றது.

> ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவதில் எங்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும், கருத்து அடிப்படையில் பல வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால் அவர்கள் மட்டுமே, கருப்பினப் போராளிகளை நண்பர்களாக கருதினார்கள். சமத்துவத்திற்காக போராடினார்கள்
>
> எங்களோடு சேர்ந்து உண்டார்கள், பேசினார்கள், வாழ்ந்தார்கள், உழைத்தார்கள். அவர்கள் மட்டும்தான் எங்களின் அரசியல் உரிமைகளுக்காகவும், சமூக மேம்பாட்டுக்காகவும் பாடுபட்டார்கள்.
>
> 
>
> நெல்சன் மண்டேலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்திய எட்கா (ETCA) ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்து



எட்கா ஒப்பந்தம் (Economic and Technology Cooperation Agreement - ETCA) இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார மற்றும் தொழில்நுட்பங்கள் தொடர்பான கூட்டுறவு களை வளர்த்துக் கொள்வதற்கான ஒப்பந்தம். இந்த ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதில் இலங்கை அரசானது மும்முரமாக ஈடுபாடுகாட்டி வருகின்றது. அதே வேளை இதற்கு எதிரான அரசியற் போக்குகள் இலங்கை முழுவதுமே காணப்படுகின்றது.


மஹிந்த ராஜபக்ஸா'வின் அரசாங்கத்துடன் இந்திய அரசாங்கம் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான முழுமையான பொருளாதார பங்காளர்கள் ஒப்பந்தம் [Comprehensive Economic Partnership Agreement (CEPA)] ஒன்றினை உருவாக்குதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்தது. புலிகளுக்கு எதிராக யுத்தம் செய்து கொண்டிருந்த காலத்தில் ராஜபக்ஸாக்கள் அந்த ஒப்பந்தம் தொடர்பாக ஆர்வம் காட்டும் வகையில் இந்தியாவுடன் ஒரு தொடர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வந்தார்கள். ஆனால், அந்த யுத்தத்தில் வெற்றியடைந்ததன் பின்னர் அந்த ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த் தைகளை இழுத்தடிக்கத் தொடங்கினர்.

சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (Free Trade Agreement - FTA) கைச்சாத்திடப்பட்டது. மஹிந்த ராஜ பக்ஷாவின் ஆட்சிக்காலத்தில் அந்த ஒப்பந்தத்தில் உள்ளடக கப்பட்ட பண்டங்கள் மேலும் விரிவுபடுத்தப்பட்டன. ஆயினும் அந்த காலகட்டத்தில் முழுமையான பொருளாதார பங்காளர்கள் ஒப்பந்தம் (CEPA) பற்றிய பேச்சு வார்த்தைகள் திருப்திகரமான எந்தவொரு கட்டத்தையும் எட்டவில்லை.

2015ம் ஆண்டு மைத்திரி அவர்கள் ஜனாதிபதி ஆகியதைத் தொடர்ந்து CEPA க்கான பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்டு அதற்கு மாற்றாக எட்கா ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம் பித்தன. இப்போது அந்த ஒப்பந்தத்தை கைச்சாத்திடும் இறுதிக் கட்ட நிலைக்கு கொண்டு செல்வதில் மைத்திரி- ரணில் கூட்டு அரசாங்கம் மும்முரமாக அக்கறை காட்டி வருகிறது.

இன்று அதிகாரத்திலிருக்கும் மைத்திரி - ரணில் ஆட்சிக்கு ஆதர வாக பின்னணியில் இருக்கும் முன்னை நாள் ஜனாதிபதி சந்திரிக்கா அவர்கள் ஐரோப்பிய பொருளாதார ஒன்றியம் (EEU) போல தென்னா சியாவிலுள்ள நாடுகளிடையேயும் "தென்னாசிய பொருளாதார ஒன்றியம் [South Asian Economic Union (SAEU) ] ஏற்பட வேண்டும் என நீண்டகாலமாக பாடுபட்டு வருகின்றார். அந்த வகையில் இப் போது முயற்சிக்கப்படும் எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற் குரிய பின்னணியில் சந்திரிகாவும் இருக்கிறார் என்றே கொள்ளலாம்.

இப்போது இலங்கை மத்திய வங்கியின் ஆளுனராக நியமிக்கப் பட்டிருக்கும் இந்திரஜித் குமாரசாமி அவர்கள் மைத்திரி மற்றும் ரணில் ஆகிய இருவரினதும் விருப்பத்துக்குரியவராவார். இவர் சர்வதேச முதலாளித்துவ உலகத்தின் பிரியத்துக்குரிய பொருளா தார நிபுணர்களில் ஒருவர். இந்தியாவுடனான பொருளார ஒப்பந்தங் களினூடாகவும், பாகிஸ்தானுடனான FTA ஊடாகவும், சீனாவுடனான FTA மற்றும் பல்வேறு வகைப்பட்ட பொருளாதார ஒப்பந்தம் மூலமா கவும் இலங்கையானது ஆசியாவில் 300 கோடி மக்களைக் கொண்ட சந்தைகளின் பங்காளர் ஆகலாம் என்று இந்திரஜித் குமாரசாமி அவர்கள் கூறுகின்றார்.




அதேவேளை, ஜே.வி.பியும், விமல் வீரவன் சாவினரும், வேறு சில சிங்கள இனவாத அமைப்புகளும் சுவரொட்டிகள் துண்டுப் பிரசுரங் கள், பத்திரிகை அறிக்கைகள் மற்றும் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் என வெவ்வேறு வழிமுறைகளில இந்தியாவுடனான எட்காவிற்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றன. எட்காவிற்கு எதிர்ப்பு எனும் பெயரில் மைத்திரி-ரணில் கூட்டாட்சிக்கு எதிரான பிரசாரங்களே அவை நடத்துகின்றன எனலாம். எட்காவுக்கு எதிராக குரல் எழுப் புவதில எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒட்டு மொத்தமாக கூட்டாக உள்ளன என்றும் குறிப்பிட முடியாது..

தமிழர்கள் மத்தியிலிருந்து எட்காவுக்கு எதிரான கருத்துக்கள் நேரடியாக அதனைத் தாக்குவதாக வெளிப்படவில்லை. இருப்பினும், தமிழ் நாளேடுகள் அவ்வப்போது தாம் வெளியிடும் கட்டுரைகள் மூலம் இந்தியாவுக்கு எதிரான தமது பிரச்சாரங்களை எட்கா ஒப்பந்தம் இந்தியாவின் நலனுக்காகவே மேற்கொள்ளப்படுகிறது என ஆய்வு விமர்சன வடிவில் நாசூக்காக வெளியிட்டு தமிழர்களை உஷார்படுத்தி வருகின்றன.

ராஜபக்ஷாக்கள் எட்காவிற்கு எதிராக உக்கிரமான செயற்பாடு களை மேற்கொள்வதில்லை – மேறகொள்ளவும் மாட்டார்கள். ஆசியப் பிராந்திய அரசியலை பிழையாக கையாண்டமையே கடந்த ஜனாதிபதி தேர்தலில் மஹிந்தா தோல்வியுற்றதற்கு ஒரு பிரதான காரணமாகும். அதுவே பலரது கணிப்பு. அவ்வாறான ஒரு தவறை ராஜபக்ஷாக்கள் மீண்டும் விடமாட்டார்கள் என்பது புரிந்து கொள்ளப் படக் கூடிய ஒன்றே.

என்ன வகையாலும் உள்ளூர் அரசியலில் மக்களை உசுப்பேத்தி தமக்குச் சார்பான நிலைமைகளை உருவாக்கினாலும், தமது எதி கால அரசியலுக்கு இந்தியாவின் அனுசரணை மறைமுகமாக வேனும் அவசியம் என்பதை ராஜபக்ஷாக்கள் கணித்தே வைத் திருக்கிறார்கள். எனவே, எட்கா விடயத்தில் தமது வாக்கு வங்கி அரசியலுக்காக ஒரு மென்மையான எதிர்ப்பு அரசியலை ராஜபக் ஷாக்கள் அவ்வப்போது எட்காவுக்கு எதிராக மேற்கொள்ளக்கூடும். ஆயினும் அது தொடர்பான எட்காவிற்கு எதிரான உக்கிரமான அரசியலை முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவு.

.எட்காவிற்கு எதிராக இலங்கை வைத்தியர்கள் சங்கம் குரல் கொடுத்து வருகிறது. இந்த எதிர்ப்புகள் அவர்களின் தொழில்சார் சுயநலன்கள் சார்ந்தவையாகவே பார்க்க வேண்டி இருக்கிறது. மேலும், இந்த வைத்தியர்கள் சங்கம் ஆடம்பரக்கார்களை இறக குமதி செய்வதற்காக தமக்கு வழங்கப்பட்டிருந்த வரிவிலக்கு சலுகைகளில் ரணில் அரசாங்கம் கைவைத்ததை அடுத்து இந்த அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாடுகளை எடுத்தனர். எனவே எட்காவிற்கு எதிரான இந்த வைத்தியர்கள் சங்கத்தின் எதிர்ப்பை அரசாங்கம் பெரிதாக பொருட்படுத்தப் போவதில்லை என்றே தெரிகிறது.

சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தால் இந்தியாவே தொடர்ந்து நன்மை பெறுகிறது என்னும் குற்றச்சாட்டு ஏற்கனவே இங்கு உள்ளது. எட்கா ஒப்பந்தம் மூலம் அந்தக் குறைபாடுகள் நீக்கப்படும் எனவும் அது இலங்கைக்கு நன்மையளிப்பதாக அமையும் என்றும் இரு நாட்டு பொருளாதார அறிஞர்களிடையேயும் வலுவான கருத்துகள் உள்ளன. அத்துடன் இலங்கையின் உற்பத்தி முதலாளிகளும் வர்த்தகர்களும் எட்கா ஒப்பந்தத்திற்கு ஆதரவாகவே உள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் இந்தியாவுடனான பொருளாதார மற்றும் தொழில் நுட்ப கூட்டுறவு ஒப்பந்தத்தை அதாவது எட்காவை எந்த எதிர்ப்பு வந்தாலும் கைச்சாத்திட்டே தீருவது என உறுதியாக இருக்கிறார் என்பது தெரிகிறது. கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை கொழும்பு துறைமுக நிதியியல் நகர திட்டமாக மாற்றி, அதற்கான ஒப்பந்தங்களை சீனாவுடன் புதுப்பித்துக்கொள்வதற்கான தீவிர முயற்சிகளில் ரணில் விக்கிரமசிங்கா உள்ளார். அதேவேளை அது இந்தியாவுடனான தமது நல்லெண்ண உறவில் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தி விடக்கூடாது என்பதிலும் அக்கறையாக உள்ளனர். அந்த வகையில் இந்தியாவுடன் எட்கா மீது கைசாத்திட வேண்டிய கட்டாய தேவையும் இந்த ஆட்சிக்கு உண்டு.

இரண்டு நாடுகளினதும் அமைச்சர்களும் அதிகாரிகளும் எட்காவை இறுதி முடிவு செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ள இன்றைய நிலை யில், அசாதாரணமான அரசியல் காரணங்களைத் தவிர வேறு எதுவும் எட்கா கைச்சாத்திடப்படுவதை காலம் தாழ்த்த மாட்டா என்பது தெளிவு.

## தோட்டத் தொழிலாளர்

### சம்பள உயர்வுக் கோரிக்கைக்கு ஆதரவு

மலையக தோட்டத் தொழிலாளர் களால் தொடர்ச்சியாக முன்னெ டுக்கப்பட்டு வருகின்ற நியாய மான சம்பளம் கோரும் போராட் டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் கவனயீர்பு போராட்டம் நடைபெற்றது

"நாள் சம்பளம் 1000 ருபா வழங்கு" என்ற கோரிக்கையை வலியுறுத்தி 11.10.16 அன்று முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதான பேருந்து




நிலையத்திற்கு முன்பாக சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பி னரின் அழைப்பின் பேரில் கவன யீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இக் கவனயீர்ப்பு போராட்டத்தில் புதிய ஜனநாயக மாக்சிச லெனி னிச கட்சியின் பொதுச் செயலா ளர் சி.கா.செந்திவேல், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த செ.கஜேந்திரன், ச்ர்வதேச மார்க்ஸிய குழுவைச் சேர்ந்த சொ.சிவபாலன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

## வடக்கில் தாதிகள்...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

னம், இராசனவியல், உயிரியல் ஆகிய விஞ்ஞான பாடங்கள் மூன்றிலும் சித்தியடைந்தவர் களே தாதியர் பரீட்சைக்குத் தோற்றலாம் என முன்னர் அறி விக்கப்பட்டது. ஆனால், அவ்வா றான தகுதியுள்ளோர் இங்குள்ள தேவைகளுக்குப் போதியதாக விண்ணப்பிக்கவில்லை. இத னால் படிப்படியாக தாதியர் தெரி வுக்குத் தேவையான கல்வித் தகுதிகளில் மாற்றங்கள் மேற் கொள்ளப்பட்டு க.பொ.த உயர் தரப் பரீட்சையில் கலை மறறும் வர்த்தக பாடங்களில் சித்திய டைந்தவர்களும் தாதியர் வேலை வாய்ப்பை நாடி விண்ணப்பிக்க லாம் என பகிரங்க அறிவுறுத்தல் கள் விடுக்கப்பட்டன. அவ்வாறி ருந்தபோதும் கூட இங்கு தாதி யர் வேலைக்கு போதியளவா னோர் விண்ணப்பிக்காத நிலையே உள்ளது.

இதன் காரணமாக, முன்னர் தாதி யர்களாக இருந்து ஓய்வு பெற் றவர்களை மீண்டும் இணைத் துக்கொள்ள வேண்டி ஏற்பட்டது அதுமட்டுமல்லாது தனியார் துறைகளில் தாதியர் சேவைப் பயிற்சி பெற்றவர்களையும அர சாங்க மருத்துவ சேவைக்கு உள்ளீர்க்க வேண்டி ஏற்பட்டது எவ்வாறாயினும் இங்கு தாதியர் கள் பற்றாக்குறையாக உள்ள நிலைமையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்படவில்லை இதன் விளைவாக வடக்கில் அர சாங்கம் மருத்துவ சேவைகளை வழங்குவதில் பல குறைபாடுக ளைக் கொண்டிருக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாக வடக் கின் சுகாதார சேவைகள் பணிப் பாளர் கவலை தெரிவித்துள்ளார்.

தி. சிறிதரன் 294, கண்டி வீதி, யாழ்ப்பாணம், அவர்களால் [illegible] யாழ்ப்பாணம் புதிய கங்கை அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org